மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

லர் 3 | 15 - 9 - 54 | இதழ் 10

மதிக்க மறுத்த மன்னன்முன் மாநிலம் கண்ட மாவீரன்



கொலம்பஸ்

ள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5



கல்லூரியில் அண்ணா

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரியில் படிக்கும் பொழுது பாடங்களையோ, நோட்சுகளையோ அப்படியே உருப்போட்டு, பரீட்சையில் பதில் எழுதும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை. அவர் பாடங்களையும், அத்துடன் மேற்கோள் காட்டும் மற்ற நூல்களையும் விரிவாகப் படித்து, அவற்றின் கருத்துக்களை நன்கு மனதில் கொண்டுவிடுவார். பின் அவற்றை வைத்துப் பரீட்சையில் தமது நடையிலேயே எழுதிவிடுவது வழக்கம்.

அண்ணா அவர்கள் கல்லூரி இரண்டாவது வகுப்பில் படிக்கும் பொழுது, ஆங்கில வகுப்பை எடுத்த பேராசிரியர் ஒருவர், பாடஞ் சொல்லிக்கொடுப்பதில் சிறந்தவர் என்று கருதப்பட்டவர். அவர் வகுப்பில் கொடுக்கும் கேள்வி—பதில்களையும், குறிப்புகளையும் மாணவர்கள் உருப்போட்டு வைத்துவிட்டால் போதும், பரீட்சையில் 'பாஸ்' செய்துவிடலாம் என்ற நம்பிக்கையிருந்தது. அண்ணாமட்டும், வகுப்பில் நோட்சுகள் எடுத்துக்கொள்வதில்லை. மற்ற மாணவர்களெல்லாம் தான் சொல்வதை ஒன்றுவிடாமல் எழுதித் தள்ளிக்கொண்டிருக்கும்பொழுது, அண்ணா மாத்திரம் பேசாமல் உட்கார்ந்திருப்பதை பேராசிரியர் பார்த்து விட்டார்.

"அண்ணாதுரை! நீ ஏன் சும்மா உட்கார்ந்திருக்கிறாய்?" என்று ஆசிரியர் கேட்டார்.

"நான் குறிப்பு எடுக்கவில்லை!" என்று அண்ணா பதிலளித்தார்.

"ஏன்?"

"அவற்றை உருப்போட்டு அப்படியே ஒப்பிக்க வேண்டாமென்று நான் நினைத்தேன்."

"கர்வம் பிடித்தவன்! உட்கார்!" என்று ஆசிரியர் சொல்லி உட்காரவைத்தார். அண்ணாவும் நோட்சுகளை எழுதவில்லை.

கடைசியாக பல்கலைக் கழக இண்டர் தேர்வு நடந்து, பரீட்சை முடிவுகள் வெளிவந்ததும், அறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கிலப் பாடத்தில் முதலாவதாகத் தேறியிருந்தார். அதற்காக அவருக்கு ஒரு பரிசும் வழங்கப்பட்டது. பரிசு வழங்கும் விழாவில், பரிசுப் புத்தகங்களை வாங்கிக்கொண்டு அறிஞர் அண்ணா அவர்கள் வந்ததும், அவருடைய ஆங்கில ஆசிரியர் எதிர்ப்பட்டு வாழ்த்தினார்.

நன்றியைத் தெரிவித்துவிட்டு, "சார்! உங்களுடைய நோட்சை நான் உருப்போட்டு ஒப்பித்திருந்தால், பாஸ் செய்திருப்பது நிச்சயம்; ஆனால் இந்தப் பரிசைப் பெற்றிருக்க முடியாது" என்று வேடிக்கையாக, அண்ணா சொன்னார்.

ஆசிரியர் சிரித்தபடி, "நீ கெட்டிக்காரன் என்று எனக்குத் தெரியுமே!" என்று சமாளித்துக்கொண்டார்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

15-9-54 புதன்கிழமை

ஐந்தாண்டு வளர்ச்சி

17-9-54-ம் நாளோடு திராவிட முன்னேற்றக் கழகம், தனது இலட்சிய வழியிலே ஐந்தாண்டு காலப் பயணத்தை முடித்துக் கொண்டு, ஆறாவது ஆண்டின் பயணத்தைத் துவக்க இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் இன்பத் திராவிடம் என்னும் இன்பபுரியை நோக்கி வெற்றிப் புன்னகையோடு வீறுநடை போட்டுச் சென்றுகொண்டிருக்கிறது. அது இன்பபுரியை நோக்கிச் செல்லவும் வேண்டியிருக்கிறது; அதேபோழ்து செல்வதற்கான வழியைச் செப்பனிடவும் வேண்டியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் நடந்துவந்துள்ள வழியும்சரி, இனி நடந்துபோகவேண்டிய வழியுஞ்சரி கரடுமுரடான கடின வழியேயொழிய, வழவழப்பான எளிய வழியல்ல. அது அறியாமை என்னும் இருளைப் போக்கி, மூடப்பழக்க வழக்கம் என்னும் முட்புதர்களை அழித்து, சனாதனம் என்னும் சருக்கல்களை நீக்கி, வர்ணாச்சிரமம் என்னும் வளைவுகளை நிமிர்த்திப், பழமை என்னும் படுகுழிகளைத் தூர்த்து, மாற்றுக் கட்சிகள் என்னும் பொறாமைப் புலிகளின் தாக்குதலுக்கு இரையாகாமல், தன்னை அழித்தொழிக்க அல்லும் பகலும் ஊளையிட்டுக்கொண்டு பாய்ந்துவரும் நயவஞ்சக நரிகளின் ஊளைகளுக்கு அஞ்சாமல், இன்பபுரியை நோக்கி, ஓயாமல் ஒழியாமல், குந்தாமல் குனியாமல், களராமல் தாழ்த்தாமல் செல்லவேண்டிய கடப்பாடுடையதாக இருந்துவருகிறது. அதன் நோக்கத்தை நேருக்கு நேர் நின்று எதிர்ப்பாரில்லை; அதன் ஆற்றலை நேருக்கு நேர் நின்று அழிப்பாரில்லை; அது தன் பயணத்தைச் செம்மையாக நடத்திக்கொண்டேயிருக்கிறது.

சென்ற ஐந்தாண்டு காலமாகக் கழகம் பெருமையும், பூரிப்பும் அடையும் வகையில் புகழ் ஏணியில் ஏறிச் செல்வதற்கு உறுதுணை புரிந்த உரவோர், கருத்துக் கருவூலம் நிறைந்த கஸ்தூரிப் பெட்டகமாக விளங்கிவரும் அறிஞர் அண்ணா அவர்களேயாவார்கள். ஒளி நிலா தன்னைச் சுற்றிக் கணக்கிலடங்கா நட்சத்திரங்களை வைத்துக்கொண்டு வான் வெளியில் நகர்வதைப்போல, அறிஞர் அண்ணா அவர்கள் தன்னைச் சுற்றி ஏராளமான தம்பிமார்களை வைத்துக்கொண்டு இலட்சிய வழியில் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

ஐந்தாண்டு காலம்! மிகக் குறைவுதான்; ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் அக்குறுகிய காலத்தில ஆற்றிய அரும்பெருஞ் செயல்கள் அளப்பரியனவாகும். அது, தென்னாட்டவரின் எதிர்ப்புணர்ச்சியை வடநாட்டவர்க்கு அறிவுறுத்தவேண்டி நடத்திய, வடநாட்டு அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டும் போராட்டங்கள், வடநாட்டவர்க்கு ஆச்சாரியார் கங்காணி ஆனதை, உணர்த்த, அவரை எதிர்த்து நடத்திய கறுப்புக்கொடி காட்டும் போராட்டம், 144 தடை உத்தரவுகளை எதிர்த்து ஆங்காங்கு நடத்திய அடக்குமுறை எதிர்ப்புப் போராட்டங்கள், இரண்யன் அல்லது இணையற்ற வீரன் நாடகத்திற்கு விதித்த தடையை மீறி நடத்திக்காட்டிய போராட்டங்கள், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திறகாகப் பரிந்து பேசி அதற்காக நடத்திய மறியல் கிளர்ச்சிகள், புகைவண்டி நிலையப் பெயர்ப்பலகையிலுள்ள இந்தியை அழிக்கும் இந்தி அழிப்புப் போராட்டம், கைத்தறியாளர்க்கு ஆதரவான கிளர்ச்சிகள், ஆச்சாரியாரின் ஆரம்பக்கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம், வடநாட்டு மொழி ஆதிக்கம்—அரசியல் ஆதிக்கம்—பண ஆதிக்கம் ஆகியவற்றை எதிர்க்கும் அறிகுறியாக நடத்தப்பட்ட கல்லக்குடிப்பெயர்மாற்றப்போராட்டம், நேருவுக்குப் பாடம் கற்பிக்கவும் தன் ஆற்றலை உணர்த்தவும் நடத்தப்பட்ட இரயில் நிறுத்தப் போராட்டம் ஆகிய பல்வேறு போராட்டங்களை நடத்தி எதிர்பார்த்த அளவுக்குமேல் வெற்றியடைந்திருக்கிறது. அது சென்ற பொதுத் தேர்தலில், தான் ஆதரவுகாட்டிய பலரை

வெற்றியுறச் செய்திருக்கிறது. கைத்தறியாளர்களின் துயர் துடைக்க ஊர் ஊராக முன்னணி வீரர்களையெல்லாம் அனுப்பிவைத்துக் கைத்தறித் துணிகளைத் தெருவெல்லாம் விற்கச் செய்து, கைத்தறியாளர்களுக்கு ஊக்கமும், உணர்ச்சியும் கொடுத்தது. தஞ்சை—திருச்சி புயல் நிவாரண நிதியாக ரூ. 25,000-க்கு மேல் சேர்த்துக், கைத்தறி ஆடைகளை வாங்கி, அவற்றை நன்கொடையாக அனுப்பிவைத்தது. தூத்துக்குடி கல்லக்குடி சதிவழக்குகளில் ஈடுபட்டுள்ள நிரபராதிகளை விடுவிக்கவேண்டி வழக்குகள் நடத்த ரூ. 27,000-க்கு மேல் நிதி திரட்டியது. இப்படியாக அது ஆற்றிய செயல்கள், ஆற்றிவரும் செயல்கள் பலப்பலவாகும். நாட்டில் எழும் ஒவ்வொரு பிரச்சினையைப் பற்றியும் திராவிட முன்னேற்றக் கழகம் என்ன சொல்லுகிறது என்பதைக் கேட்டறிய நாடும், நாட்டின் அரசாங்கமும், மாற்றுக் கட்சிகளும் அக்கறை கொள்ளுகின்றன என்றால், அதன் வளர்ச்சியை யாவரும் ஒருவாறு ஊகித்தறிந்து கொள்ளலாம்.

யறிய நாம் மகிழவேண்டியவர்களாக இருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து வந்துள்ள நிலைக்கும், வளரவேண்டிய நிலைக்கும் இடையிலுள்ள இடைவெளி மிகப்பெரிதாகும். அந்த இடைவெளியை மிக விரைவில் போக்க வேண்டியது கழகத்தோழர்களின் இன்றியமையாக் கடமையாகும்.

பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் கூறும் அறிவுரைகளை ஏற்று, ஆர்வத்தோடு ஆனால் ஆத்திரப்படாமல், மனமகிழ்ச்சியோடு ஆனால் மாற்சரியங்கொள்ளாமல், மாற்றாரை அன்போடு அணுகி ஆனால் அவர்களுக்கு அருவருப்பு ஊட்டாமல் பெருமைக்கும் பூரிப்புக்கும் உரியவகையில் கழகத்தோழர்கள் கழகத்தை வளர்ப்பார்களாக!

வாழ்க திராவிடம்!

வளர்க கழகம்!

இரா. நெடுஞ்செழியன்

வெல்க தொண்டு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி கண்டு பொறாமைப்பட்ட—பொச்சரிப்புக் கொண்ட மாற்றுக் கட்சிக்காரர்கள் ஏசுதல், தூற்றுதல், வசைமாரி பொழிதல், இழித்துரைத்தல், பழித்துப் பேசுதல் ஆகிய செயல்களில் மிகத் தீவிரமாக இறங்கியுள்ளனர். அது கண்டு கழகத் தோழர்கள் யாவரும் கலங்கிடத் தேவையில்லை. ஏனெனில் மாற்றுக் கட்சிக்காரர்களின் இழிவுரை, பழிவுரைகளால் அழிந்து, ஒழிந்துபோகக்கூடிய கொள்கைகள் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகள். "ரோசா மலரை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அது மணக்கவே செய்யும்" என்ற ஆங்கிலப் பெருங்கவிஞன் ஷேக்ஸ்பியரின் கூற்றுக்கொப்ப, "திராவிட முன்னேற்றக் கழகத்தை யார் என்ன பெயரிட்டு அழைத்தாலும் அதன் மணம் மங்காது; புகழ் குன்றாது" என்றுதான் கூறிக்கொள்ள வேண்டிய பெருமைமிகு நிலைமையிலிருக்கிறோம். "எதையும் தாங்கும் இதயம் உண்டு" என்ற உள்ள உறுதிப்பாட்டோடு சென்ற ஐந்தாண்டுக்காலமாகக் கழகத் தோழர்கள் கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுங்கு, நேர்மை, நியாயம் ஆகியவற்றைக் கடைப்பிடித்துக் கழகத்தை நாடு நகரங்கள் பட்டி தொட்டிகளிலெல்லாம் வளர்ந்துவருகிறார்கள் என்பதை

கருத்துக் கதிர்

பக்தி பெருக பண்புதான் குறைகிறது!

“தெய்வபக்தி வேரூன்றினால் இதர பண்பாடுகள் மக்களிடையே தாமே வளரும். பக்தியை வளர்க்கும் முயற்சிகள் பல தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இந்த இயக்கத்தில் சமய பேதங்களைச் சரிப்படுத்த வேண்டும். எல்லாவித வழிபாட்டு முறைகளுக்கும் இடம் தரவேண்டும்.” என்று அன்பர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் சென்னை பிரசன்ன விநாயகர் கோவில் ஒன்றின் விழாவில் அண்மையில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக உலகிலும், குறிப்பாக இந்தியாவிலும் தெய்வ பக்திக்குக் குறைவு ஏற்பட்டுவிட்டது என்பதை எந்த ஆஸ்திகரும், ஒப்புக்

கொள்ளமாட்டார்கள். தெய்வ பக்தியிலே இந்திய மக்கள் மிகச் சிறந்து விளங்குகிறார்கள் என்பதை வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் ஆஸ்திகர்கள் பெருமைப்படக் கூறிக்கொள்ளத் தவறுவதில்லை. தெய்வபக்தி வேரூன்றினால் இதர பண்பாடுகள் தாமே வளரும் என்ற ஆச்சாரியார் கூற்று உண்மையானால், தெய்வ பக்தி மிகுந்த இந்தியாவில் பண்புகளுக்கு ஏன் மிகமிகப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதோ தெரியவில்லை. கொலை, கொள்ளை திருட்டு, ஏமாற்று, பொய், பித்தலாட்டம், வஞ்சகம், சூது, சூழ்ச்சி ஆகியவற்றைச் செய்துவிட்டுச் சிறையிலே கிடக்கும் ஆயிரமாயிரம் மக்கள் அனைவரும் தெய்வபக்தி அற்றவர்கள் என்று அவ்வளவு எளிதில் யாரும் கூறிவிடமுடியாதே. அவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொம்பது பேர்கள் தெய்வபக்தியுடையவர்களாக இருந்தும், ஏன் அவர்கள் பண்பற்றவர்களாக இருந்துவருகிறார்கள்? பண்பிறந்த செயல்களில் ஈடுபடும் தெய்வத்திடத்தில் பக்தி செலுத்தும் காரணத்தால் வேண்டுமானால் பலர் பண்பற்றவர்களாகக் காணப்படுகிறார்கள் என்று கூறமுடியுமேயொழிய, பக்தி மனிதனைப் பண்புடையவனாக ஆக்கினதாக வரலாறு சான்று பகரவில்லை. மக்களிடத்தில் அன்பு செலுத்தப் பழகிக்கொண்டவன் தான் பண்புடையவனாக வாழ்கிறானேயல்லாமல், ஆண்டவனிடம் பக்தி செலுத்தியவன் அப்பக்தி காரணமாகப் பண்புடையவனாக யாறிவிடுவதில்லை. தெய்வத்தினிடம் காட்டும் பக்தியைவிட மனிதனிடம் காட்டும் அன்புதான், ஒருவனைப் பண்புடையவனாகச் செய்கிறது என்பதைத் தெளிவாக அறியலாம். அப்படியிருந்தும் ஆச்சாரியார் தெய்வபக்தி பற்றிப் பேசுகிறாரே என்றால், அதுதான் அவர் குலத்தொழில் பண்ணைக் கைவிட மறுக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டுவதாகும்.

சமய பேதங்களைச் சரிப்படுத்த வேண்டும் என்று சொல்லுகிற அதே ஆச்சாரியார், எல்லா வித வழிபாட்டு முறைகளுக்கும் இடமளிக்க வேண்டும் என்று கூறுகிறார் என்றால், அவரது கூற்றிலுள்ள முரண்பாடு எந்த அளவுக்கு கெக்கொலிகொட்டி நகைத்தற்குரியது என்பதை ஓர்ந்துபார்மின்!

ஃ ஃ ஃ

இந்தி ஏகாதிபத்தியம்

வடநாட்டு ஆதிக்க வெறிகொண்ட சர்க்கார், இந்தியை எல்லாத் துறைகளிலும் கட்டாயப்படுத்துவன்மூலம், இந்தி ஏகாதிபத்திய ஆட்சியை நிறுவ முயன்றுவருகின்றனர். திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் இந்தி எந்த வகையிலும் பயன்தரும் மொழி அல்லவென்றும், ஏதேனும் பயன்தரக்கூடிய பிறமொழி ஒன்று உண்டென்றால் அது ஆங்கிலமாகத்தான் இருக்கமுடியும் என்றும், தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் முறையே தங்கள் தாய்மொழியாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளையும், உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்தையும் மட்டும் கொண்டால் போதும், வேறு மொழி எதுவும் தேவையில்லை என்றும் பலகாலும் நாம் தெளிவுபடுத்திவந்துள்ளோம். இனிப் போர்ப்படைகளில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக—ஆணைமொழியாக இருக்காதாம்; ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி கட்டாயப் படுத்தப்படுமாம்; இந்தச்செய்தியை மத்திய உதவிப் பாதுகாப்பு அமைச்சர் தோழர் மகாவீரத் தியாகி இந்தியப் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளார். போர்ப்படைகளில் இந்தி ஆட்சிமொழியாகும் தகுதி படைத்துவிடுகிறது என்றால், இந்தியைவிட வளமான தமிழ் ஏன் போர்ப்படைகளில் ஆட்சிமொழி ஆகக்கூடாது? இந்தி ஏகாதிபத்தியம் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. அந்த ஆதிபத்தியத்தை அழிக்கவேண்டியது திராவிடரின் நீங்காக் கடமையாகும்.

ஃ ஃ ஃ

'கடவுள்' குறைந்து 'கருத்து' மிகவேண்டும்

சென்னை தியாகராய நகரில் விநாயக சதுர்த்தி விழாவை ஒட்டிக் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில், இந்தியாவின் சுப்ரீம்கோர்ட் நீதிபதியான தோழர் டி. எல். வெங்கட்டராமய்யர் அவர்கள் பேசும்போது, பாடப்படும் பாட்டுகளெல்லாம் கடவுளைப்பற்றியே பாடவேண்டும், அப்பொழுதுதான் தெய்வபக்தியும் மதபக்தியும் ஏற்படும், அவையிரண்டும் வாழ்க்கைக்கு மிக அவசியம் என்று கூறியுள்ளார். தமிழ்நாட்டில் சங்ககாலப் புலவர்களைக் காட்டிலும், பிற்காலங்களில் தோன்றிய புலவர்கள்

தாம் கடவுளைப்பற்றி வண்டிவண்டியாகப் பாடல்கள் இயற்றியுள்ளார்கள். கடவுளைப் பற்றி மிகவாகப் பாடாத சங்ககாலத்தைவிட, கடவுளைப்பற்றி மிகவாகப் பாடும் பிற்காலந் தான் எல்லாவகையிலும் தாழ்வுற்றிருக்கிறது. மக்கள் வாழ்க்கை உள்ளபடியே முன்னேற வேண்டுமானால், கடவுள் பாடல் குறைந்து பிற கருத்துள்ள பாடல்கள் மிகவேண்டும். கடவுட் பாடல்கள் மிகுந்தால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதற்கொப்ப, "புதுப்பாங்கும் புதுக்கருத்தும், பல்பொருளின் நல்லழகும் உயர்வும் இந்த நாடு பெறமுடியாது, தன்னில் ஊறும் நல்லூற்றுக் கவிஞர்களும் தோன்றமாட்டார், மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும், மடையர்களும் இயற்றிடுவார் கடவுட் பாடல்" என்றுதான் திரும்பத்திரும்பக் கூறிடவேண்டியிருக்கும்.

ஃ ஃ ஃ

பக்துனிஸ்தானைப் பாரீர் !

பாக்கிஸ்தானிலிருந்து பக்துனிஸ்தானைத் தனிநாடாகப் பிரித்துவிடவேண்டும் என்ற கிளர்ச்சி நாளுக்குநாள் வலிவடைந்து வருகிறது. இந்தியாவிலுள்ள ஆப்கன தூதர் ஜனாப் அப்துல் ஹஸேன் அஸீஸ் அவர்கள், "பக்துனிஸ்தான் பிரச்சினை அமைதியாகத் தீர்க்கப்படும் என நம்புகிறேன். அந்தத் தீர சமுதாயத்தினர் சுதந்தரம் பெற்றுச் சமாதானத்துக்காக உழைக்கவேண்டும். பக்துனிஸ்தான் சுதந்தரக் கோரிக்கையை மறுக்க முயல்வது உலக அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும்" என்று எச்சரிக்கை செய்துள்ளார்.

திராவிடநாடு பிரிவினையை ஏற்க மறுப்பவர்கள், பக்துனிஸ்தானின் கோரிக்கையைக் கூர்ந்து கவனிப்பார்களேயானால், திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கை எவ்வளவு நேர்மையான—நீதியான—அவசியமான அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளது என்பதை எளிதில் உணரக்கூடும். எனவேதான் "பக்துனிஸ்தானைப் பாரீர் !" என்று அத்தகையோரை அழைக்கிறோம்.

ஃ ஃ ஃ

மூடநம்பிக்கையின் பலன்

மூடநம்பிக்கை எந்த அளவுக்கு ஒரு மனிதனை ஆட்டிப்படைக்கிறது என்பதற்கு, மதுரையில் பக்தர் ஒருவர் கண்ட கனவே சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. மதுரையில் பரமஹம்ஸ ரமணயோகி என்பவர், மீனாட்சியம்மன் தம் எதிரில் தோன்றுவதுபோலவும், வைரநகைகளைத் தனக்குக் காணிக்கையாகச் செலுத்தும்படி கேட்டதுபோலவும் கனவு ஒன்று கண்டாராம். உடனே ஒரு ஜோடி வைரத்தோடு, ஒரு வைர பேசரி, ஒரு சிகப்புக்கல் அட்டிகை ஆகிய நகைகளைக் காணிக்கையாகச் செலுத்துவதாகக்கூறி ரூ. 2500 பெறுமான மேற்படி நகைகளை மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தான நிர்வாக அதிகாரியிடம் சேர்ப்பித்தாராம். இது நடந்தது 4-9-54-ல் இந்த 'அற்புத' நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, மீனாட்சியம்மனின் மகிமையைப் பற்றிச் சிலர் பேசத்தொடங்கியிருக்கிறார்கள். தனக்கு நகை வேண்டும் என்பதற்காகப் பக்தரின் கனவில் தோன்றிய மீனாட்சியம்மை, நாட்டின் பஞ்சம், பசி, பட்டினி, வறுமை, ஏழ்மை, நோய் ஆகியவைகளைப் போக்கப் பணத்தையெல்லாம் வாரியிறைக்கும்படி ஏன் பணக்கார பக்தர்களின் கனவில் இதுவரையில் தோன்றிச் சொல்லியிருக்கக் கூடாது என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா ! மீனாட்சியம்மையும் சுயநல நோக்குடையாரேயன்றிப் பொதுநல நோக்குடையளல்லள் என்பது பெறப்படுகின்றது ! மீனாட்சியம்மையின் பேரால் ஏற்பட்ட மூடநம்பிக்கைக்குக் கனவுகண்ட பக்தர் செலுத்திய காணிக்கை ரூ. 2500 !

ஃ ஃ ஃ

சோதிடப் புரட்டை

'அவாளும்' கண்டிக்கிறார் !

வடநாட்டு நவாப் ஒருவனுக்குப் புதையல் தேடித் தருவதாகச் சொல்லி தென்னாட்டுச் சோதிடர் ஒருவர் செல்லுகிறாராம். மந்திரத்தால் மாங்காய் விழுமா என்று கேட்டு, சோதிடரின் ஜாதக ராசியைக் கிண்டல் செய்து "சுதேசமித்திரன்" இதழ் "புதையல் பித்து" என்று தலைப்பிட்டுத் துணைத்தலையங்கம் ஒன்று எழுதியிருக்கிறது. சோதிடப் புரட்டை 'அவாளும்' கண்டிக்கிறார் என்று உணரும்போது நாம் மகிழாமல் இருக்கமுடியாதல்லவா !

வளமார் திராவிடம்

கண்ணாடி உற்பத்தி

நல்ல கண்ணாடிப் பொருள்கள் உற்பத்திச் செய்வதற்கேற்ற பரந்த மணல் குவியல்கள் சென்னை மாநிலத்தைச் சேர்ந்த எண்ணூரிலும், திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த சேர்த்தாலையிலும் இருக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு இடங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட மண் கல்கத்தாவிலுள்ள கண்ணாடி ஆய்வுச் சாலையில் ஆராயப்பட்டு, கண்ணாடி உற்பத்திக் செய்வதற்கான நல்ல வகையான மண் அவை என்று கூறப்பட்டுள்ளது. அந்த மண்ணை அப்படியே பயன்படுத்தினால் பச்சைநிறக் கண்ணாடிகளை உற்பத்திச் செய்யலாம் என்றும், அவற்றைச் சுத்திகரிப்புச் செய்துவிட்டுப் பயன்படுத்தினால் நிறமற்றக் கண்ணாடிகளை உற்பத்திச் செய்யலாம் என்றும் சொல்லப்படுகின்றன. சுத்திகரிப்புச் செய்வதற்கு மிகச் சொற்பமே செலவாகும் என்று கணக்கிடப்படுவதால், கண்ணாடி உற்பத்திச் செலவு எந்த அளவிலும் மிகப்படுவதாக இருக்காது என்று கூறப்படுகிறது.

ஃ ஃ ஃ

மாம்பழ ஏற்றுமதி

திராவிடத்தில் விளையும் மாம்பழங்கள் ஆண்டுதோறும், வடநாடு, பர்மா, மலேயா, சிங்கப்பூர், மேலைநாடுகள் ஆகியவற்றிற்கு இலட்சக்கணக்கில் ஏற்றுமதியாகின்றன. அவைகளில் செங்கற்பட்டு மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் உற்பத்தியாகும் பழங்கள் மிகப் பேர்போனவை.

சென்ற ஆண்டில் வடநாட்டு நகரங்களுக்கு மட்டும் முப்பத்தாறு லட்சம் பழங்கள் ஏற்றுமதியாகியிருக்கின்றன. இதுபோன்றே பிற நாடுகளுக்கும் ஏற்றுமதியாகி யிருக்கின்றன. சென்னை மாநிலப் பழங்களுக்கு பர்மா, சிங்கப்பூர் பகுதிகளில் மிக கிராக்கி உண்டு. சாதாரண பழம் அணா 8, அணா 12-க்குப் போகும். உன்னிப்பான உற்பத்திப் பெருக்கமும், அக்கரையான ஏற்றுமதி வசதிகளும் ஏற்பட்டால் மாம்பழங்கள் திராவிடத்திற்குப் பெரும் பொருள் ஈட்டித்தரும்.

ஃ ஃ ஃ

கந்தகப் புதையல்?

திருப்பாதிரிப்புலியூருக்கருகில் நத்தவேலி என்ற இடத்தில், ஒருவர், சில நாட்களுக்கு முன்னர் குழாய்க் கிணறு ஒன்று இறக்கினர். 65 அடி ஆழம் தோண்டியும் தண்ணீர் கிடைக்கவில்லை. அவ்வழியே சென்ற ஒருவர் தண்ணீர் வருகிறதா என்று எட்டிப் பார்த்தாராம். அப்பொழுது பீடி பற்றவைக்கத் தீக்குச்சியைக் கிழித்தாராம். உடனே குழாய் தீப்பற்றிக் கொண்டு 3 அடி அளவுக்குத் தீச்சுழல் வீசிற்றும். பிறகு தீயணைக்கும் படையினர் வந்து தண்ணீரைக் குழாய்க்குள் செலுத்தித் தீயை அணைத்து, குழாயின் வாயைச் சாக்கினால் அடைத்துவைத்தார்களாம் அடியில் கந்தகப் புதையல் இருக்கக்கூடும் என்று நிபுணர்கள் ஊகிக்கின்றனர். உண்மை கண்டறிய ஆராய்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

நீலகிரியில் இரும்பும் மைக்காவும்

மலபார்-நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த மால்நாடு பகுதியில் இரும்பு, மைக்கா, பைரைட்ஸ் கனிகள் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்று இந்திய நில ஆராய்ச்சித்துறையைச் (Geological Survey of India) சேர்ந்த உதவி நில வல்லுநர் (Assistant Geologist) தோழர் ஏ தாமோதரன் அவர்கள் அறிக்கை ஒன்றில் வெளியிட்டுள்ளார்.

நீலகிரியின் வடபகுதியில் சேரம்பாடி—தேவாலா—கூடூர் சாலையின் இரு மருங்கிலும் சுமார் 70 சதுரமைல் பரப்பில் இரும்பு, மைக்கா, பைரைட்ஸ் கனிகள் புதைந்து கிடக்கின்றன. அவற்றை வெட்டி எடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றால் நல்ல பலன் கிடைக்கக்கூடும்.

தேவாலாவின் வடக்கே வடகிழக்குத் தென்மேற்காக ஓடும் குன்றுகளின் முகடுகளில் மாக்னடைட் இருப்பதாகவும், அது உயர்ந்த தரமான வகையைச் சேர்ந்தது என்றும், ஆனால் மிகச் சொற்பமான அளவில் கிடப்பதாகவும் செய்தி அறிவிக்கப்படுகின்றது.

உழவுத் தொழில் உயர்வடைய

[அறிஞர் சி. என். அண்ணாதுரை]

இன்று, உழவுத் தொழில் நம் நாட்டைப் பொறுத்த வரையில், இலாபகரமானதாக இல்லை; இதற்குக் காரணம் என்ன?

உழவுத் தொழில் இன்னமும் மெருகேறாத ஒரு தொழிலாக இங்கு இருப்பானேன்?

இந்த நாட்டில், ஒரு ஏக்கர் நிலத்தில் கிடைக்கும் உற்பத்திப்பொருள், வேறு பல நாடுகளில் இதே அளவு நிலத்தில் கிடைக்கும் உற்பத்திப் பொருள்களைக் காட்டிலும் பலமடங்கு குறைவாக இருக்கிறது—இதற்குக் காரணம் என்ன?

இந்த நாட்டு உழவர் பெருமக்கள் சரியாக உழைப்பதில்லையா என்றால், அப்படி அல்ல; வேறு நாட்டவரைக் காட்டிலும், இந்த நாட்டவர்தான் கடுமையராக உழைக்கிறார்கள்; அதிலும், கோவை மாவட்டம்போன்ற இடங்களில் நிலத்தை உழுது பயிரிட்டுப் பலனடைவது என்பது, 'கல்லிலிருந்து நார் உரிப்பதைப்' போன்றதாகும்! பருக்கைக் கற்களும், முட்புதர்களும், கரம்புக் காடுகளும் நிறைந்த இந்த மாவட்டத்தில், உழவரின் உழைப்பு அளவிட முடியாதது! அப்படி எல்லாம் உழைத்தும், நல்ல வருமானமும், வளமும், பலனும் இல்லாமற்போவானேன்?

வேறு பல மேலைநாடுகளில், உழவுத் தொழிலுடன் அவர்கள் விஞ்ஞானத்தையும் கலந்து கொண்டு வேலை செய்கிறார்கள்; அதனால் அவர்கள் குறைவாக உழைத்தாலும், நம்மைக்காட்டிலும அதிகமான பலன் பெறுகிறார்கள்.

வெள்ளியை உருக்கி, நாணயமாக நாம் அடுக்கமுடியாது; அதற்கு, சர்க்கார் முத்திரை போடப்படும்போதுதான் வெள்ளி, ரூபாயாக மதிப்பிடப்படுகிறது—நாட்டிலே உலவுகிறது; அதைப்போலவே, உழவுத்தொழில் நன்கு மதிப்பிடப்பட, நல்ல பலன்தர, விஞ்ஞான முத்திரை அத்துடன் பொறிக்கப்பட வேண்டும்!

நம்முடைய நாட்டிலே நாம் விஞ்ஞான அறிவைப் பெருக்கிக்கொண்டு, உழவுத் தொழிலையும் அந்த விஞ்ஞானத்துடன் செய்தால்தான் குறைந்த உழைப்பில் நிறையப் பலன்பெற முடியும்.

ஐரோப்பாவில் உள்ள டென்மார்க் போன்ற நாடுகளில், பசுமாடு கூட்டத்தையும், பசும் புல் தரையையும் வைத்துக்கொண்டே, வையம் வியக்க வாழ்கிறார்கள்; அந்த நாட்டவர்கள், பசுமாடுகளைப் பேணி வளர்த்து, பால் கறந்து, பாலாடை எடுத்து, விஞ்ஞான ரீதியாக அதைப் 'பாடம்' செய்து பல நாடுகளுக்கும் தந்து, அந்த வருமானத்தைக் கொண்டே வாழ்கிறார்கள்; அந்த நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ, அவர்களுக்குக் கிடைத்திருக்கிற சொத்துக்கள், பசுக்கூட்டம், பசும் புல்தரை ஆகியவைகளேதான்! ஆனால், இந்த நாட்டில், தங்கம் முதல், எல்லா உலோகங்களும், கனிப் பொருள்களும், நிலவளமும், நீர்வளமும் ஆகிய எல்லா வளங்களுமிருந்தும், நிலத்தில் இறங்கி உழைக்கும் உழவர்களுக்கு மூன்று வேளை உணவும், ஒண்டக் குடிசையும் உடுத்த உடையும் கிடைப்பதில்லை.

இதை எல்லாம் எண்ணிப் பார்த்தால், உழவுத்தொழில் முன்னேறி, நல்ல பலன்தரும்,—இலாபம் தரும் தொழிலாக மாற, முதலாவதாக, அந்தத் தொழில் தற்கால விஞ்ஞான அறிவுடன் செய்யப்பட வேண்டும்; இரண்டாவதாக, இன்று உழவர் பெருமக்களுக்கு உழவுத் தொழிலில் அக்கறை இல்லை; அந்த அக்கறை அவர்களுக்கு வருமாறு செய்யவேண்

டும். இந்த இரண்டும் செய்தால்தான் உழவுத் தொழில் ஈடேற முடியும்; நாடு முன்னேற்றத்தைக் காணமுடியும்.

உழவர்களுக்கு அக்கறை இல்லை என்பதை இனியும் மூடி மறைத்துப் பயனில்லை; உழவுத் தொழிலில் இருந்த அக்கறை இப்போது குறைந்துவிட்டது. நான் இப்படிச் சொல்லும் போது, உழவர்கள் எல்லோரும் ஏதோ உழைக்காத சோம்பேறிகளாக மாறிவிட்டார்கள் என நான் கூறுவதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். எப்படி அவர்களுக்கு அக்கறை குறையாமலிருக்கமுடியும்?

ஒரு சிறு வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருப்பவன்கூட, தங்களிலும் சற்று உயர்ந்த வாழ்வு பெற்றிருப்பதைப் பார்க்கிறார்கள்; தங்களைக் காட்டிலும் குறைந்த அளவு உழைக்கும் பலர், பல வழியிலும் சற்று வசதியான வாழ்வு பெற்றிருப்பதைக் கண்டு புழுங்குகிறார்கள்;—அதாவது, உழவுத்தொழில், வாழ்வுக்குப் பாதுகாப்புடைய தொழிலாக இல்லை; உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் போதுமான வாழ்க்கை வசதிகள் தரப்படவில்லை—இதை எண்ணும்போது, உழவர்களுக்கு, தங்கள் தொழில்மீது வெறுப்பேற்படுவது இயற்கைதானே!

இரண்டாவதாக, உழவர்கள் ஆண்டு முழுவதும் உழைக்கிறார்கள்; உழுது, பண்படுத்தி, பரம்படித்து, விதைத்து, நீர்பாய்ச்சி, களை எடுத்து, காவல் புரிந்து, பயிர் வளர்க்கிறார்கள்; அவர்கள் உழைப்பால் உயர்கிறது நெற்கதிர்; பார்க்கிறார்கள்—பெருமூச்சு விடாமலா இருக்க முடியும்?

'கதிர்கள் தலை தாழ்த்தி ஆடுவது, எம்மால்; எம் உழைப்பால்; ஆனால், அந்தக் கதிரில் உள்ள நெல் மணிகள் நாளை நமக்கா வரப் போகின்றன? எங்கோ இருக்கும் நிலப் பிரபுக்கு, அவர் வீட்டுக் களஞ்சியத்திற்குத் தானே போகப்போகிறது'—என்ற எண்ணம் தோன்றும்போது, 'உழைப்பின் பலன் நமக்கில்லை; இன்னொருவனுக்குத்தான்,'—என்று எண்ணும்பொழுது, உழவர்கள், அந்தத் தொழிலில் அக்கறை காட்டவா முடியும்?

இனி அவர்களுக்கு, தொழிலில் அக்கறை வளர இரண்டு நல்ல காரியங்களைச் செய்தாக வேண்டும்—ஒன்று, வேறு பல தொழில்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு இந்தத் தொழிலுக்கும் கிடைக்க திட்டம் தீட்டியாக வேண்டும்: இரண்டாவதாக, உழுகிறவர்களுக்கு நிலம் தரப்படவேண்டும்.

நிலச் சீர்திருத்தம் பற்றி சர்க்கார் யோசித்து வருவதாக அடிக்கடி பேசப்படுகிறது; யோசிக்கட்டும், சர்க்கார், நன்றாக! ஆனால் பல யோசனைகளில், இதையும் ஒன்றாக வைத்துக்கொள்ளக்கூடாது.

இருசாராருக்கும்—நிலப் பிரபுவிற்கும் உழவர்களுக்கும்—மோதுதல் ஏற்படுகிற வகையில் சர்க்கார் பிரச்னைகளை ஒத்திப்போட்டுக் கொண்டே செல்லக்கூடாது; இவர்கள் இருவரையும் மோதவிட்டு ஓட்டு வேட்டையாடுவதிலேதான் காங்கிரஸ் சர்க்கார் கவனமாயிருக்கிறது என்று எண்ணுகிறேன்; அல்லது, 'இந்த நிலப்பிரிவினைதான் என்றாவது வருவது வரத்தானே போகிறது; அதுவரையில், தள்ளுகிற வரையில் காலம் தள்ளலாம்,' என்று எண்ணும் இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கிறதோ என்னவோ, சர்க்கார்!

ஆனால், ஒன்று மட்டும் சர்க்காரின் கவனத்திலிருக்கவேண்டும்—தஞ்சை மாவட்டத்தில் உழவர்களுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் இடையே தோன்றிய நிலைகள், மற்ற மாவட்டங்களிலும் வளரா முன்னம், பிரச்சினை கவனிக்கப்படவேண்டும்!

நிலப் பிரபுக்களைப் பார்க்கும்போது அவர்களுக்குச் சமாதானமும், உழவர்களுக்குச் சமாதானமும், உழவர்களைக் காணும்போது, அவர்கள் உள்ளம் குளிரப் பேசுவதும் கூடாது.

சர்க்கார், இரண்டு தரப்பினரையும் கூப்பிட்டுவைத்து, நிலப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவைச் சீக்கிரமே மேற்கொள்ளவேண்டும்.

நிலங்களை விவசாயிகளுக்குப் பிரித்துத் தந்தால் மட்டும் போதாது; பிரித்துத் தரப்படுகிற நிலங்களை கூட்டுப் பண்ணை முறையில் பயிரிட்டால்தான் எல்லா விவசாயிகளும் நல்லதோர் பலன் காண முடியும்; அந்த வகையில், சிறு, சிறு நிலப்பரப்பைச் சொந்தமாக உடைய விவசாயிகளை, கூட்டுப் பண்ணை முறையில் ஒன்றாகக்கூட்டி, அந்தப் பண்ணை நிர்வாகத்தை வேண்டுமானால் அனுபவம் பெற்றவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சம்பளம் கொடுத்துப் பார்க்

க் சொல்லலாம் ; அதன் மூலம், இந்த விவசாயத்தொழிலில் அவர் பெற்றிருக்கிற நிபுணத்துவத்தையும் நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

நிலங்களை உழவர்களுக்குப் பிரித்துத் தந்துவிடுவதாலேயே வறுமை போய்விடுமென்பதல்ல ; நிலம் பிரித்துத் தரப்படுமென்பதின் மூலம், உழவர்களுக்கு, தொழிலில் அக்கறை வளரும்.

அந்த அக்கறையுடன், விஞ்ஞான அறிவும் தரப்பட்டால் தொழிலில் நல்ல பலன் கிடைக்கும் ; அப்போதுதான் வறுமை ஒழியும்!

இவற்றைச் செய்ய, ஒரு நல்ல அக்கறை கொண்ட சர்க்கார் வேண்டும் ; இங்குள்ள காமராசர் சர்க்காருக்கு, அக்கறைகூட இந்த விஷயத்தில் இருக்கலாம் ; ஆனால், அதிகாரமில்லாத சர்க்காராக இருக்கிறது!

நேருவின் தலைமையில் உள்ள சர்க்காரோ, அதிகாரமிருந்தாலும், தென்னாட்டவர்மீது அக்கறை இல்லாத சர்க்காராக இருக்கிறது!

அட்டைப்பட விளக்கம் :

மூடநம்பிக்கை மிகவாகப் பரவியிருந்த அன்றைய நாட்களில், புதியன கண்டுபிடித்த அறிவியல் அறிஞர்களை இவ்வுலகம் ஏற்றிப் போற்றிட முன்வந்ததில்லை. மாறாக, உண்மை உரைத்த உத்தமர்களை உயிருடன் கொளுத்தியிருக்கின்றனர் ; நன்மை செய்திட எண்ணிய நல்லறிவாளர்களை நாடுகடத்தியிருக்கின்றனர்; வையகம் புகழவேண்டிய வல்லுநர்களை விலங்கிட்டுச் சிறையில் தள்ளி வதைத்திருக்கின்றனர்.

கி. பி. 15-ம் நூற்றாண்டில் அமெரிக்கா என்ற பெருநிலப்பரப்பைக் கண்டுபிடித்தான் கொலம்பஸ். இந்தியா அடைய வழிதேடிச் சென்றவன், ஐரோப்பியர் அறிந்திராத ஒரு கண்டத்தைக் கண்டுபிடித்தான். உலகம் உருண்டை என்ற உண்மையைத் துணைக்கொண்டு பயணத்தைத் துவக்கினான் கொலம்பஸ். ஆனால் மக்கள் அவனை எள்ளி நகையாடினர் பித்தனென்று பேசினர். அவனது திட்டத்தை மன்னன் மதிக்க மறுத்தான். ஆனால் அரசியின் ஆதரவு பெற்றுச் சென்று புதிய கண்டத்தைக் கண்டு மீண்டான்.

புதியது கண்டோம். போற்றிப் புகழ்வர் என்று எண்ணினான். 1493-ம் ஆண்டு எப்ரல் திங்கள் திரும்பிய கொலம்பஸ் புதிய கண்டத்தைப் பற்றிய செய்திகளை ஸ்பெயின் மன்னன் பெர்டினாண்டு அறியும் வண்ணம் அரசவையில் கூறினான். அக்காட்சியே அட்டைப்படத்தில் இருப்பது. கொலம்பஸ் எண்ணியவாறு அவனை யாரும் புகழவில்லை. ஒருமுறை அவனைச் சிறைப்படுத்தினர். பின் விடுதலை அளிக்கப்பட்டாலும், சாகும்வரை ஒரு சாதாரண மனிதனாகவே இருந்து இறந்தான் மாவீரன் கொலம்பஸ்.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண் சங்கு சியக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

REGD NO. 3817.

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் - ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் : வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

301

விளைவும் விளக்கமும்

சென்னை கவர்னர் சம்பளத்தைக் குறைக்க ஐக்கியநாடுகள் சபை சென்று போராடுவோம் என்று பொதுச்செயலாளர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் திருச்சி தி. மு கழகப் பொதுக்கூட்டத்தில் அண்மையில் பேசியதாகத் "தினத்தந்தி" இதழ் செய்தி ஒன்று வெளியிட்டிருந்ததே, அதன்படி சென்னை கவர்னர் சம்பளத்துக்கும் ஐக்கியநாடுகள் சபைக்கும் என்ன தொடர்பு ? போராட்டம் எப்படி நடைபெறும் ? எந்தவகையில் வெற்றிதரும் ?

செய்தி "தினத்தந்தி"யில் வெளி வந்தது என்பது ஒன்றைக் கொண்டே, அது ஆதாரமாக ஏற்றுக்கொள்வதற்கு உரியதல்ல என்ற முடிவுக்கு எவரும் எளிதில் வந்துவிடலாம். ஏனெனில் "தினத்தந்தி" தினவதந்திகளைப் பரப்பிவருவதற்காக இருந்துவரும் நாளிதழாகும். எந்தச் செய்தியாக இருந்தாலும், அதனைப் "பழிச் செய்தி"யாக மாற்றியமைப்பதிலே அந்த இதழுக்குத் தனியா ஆர்வமும், நீங்காப் பற்றும் உண்டு. மற்றச் செய்தித்தாள்களெல்லாம் உண்மைச் செய்திகளை உள்ளது உள்ளவாறே வெளியிட கூடுமானவரையில் முயன்று பார்க்கின்றன வென்றால், அவைகளினின்றும் தன்னை வேறுபடுத்திக்காட்டிக் கொள்ள, தினத்தந்தியார் பொய்மையிலே பழுத்த "பழிசெய்தியாரா"க மாறவேண்டிய இன்றியமையாமையிலிருக்கிறார். உண்மைச் செய்திகளைத் திருத்தியும், மாற்றியும், கூட்டியும், குறைத்தும், இல்லன புனைந்தும், ஏற்பன நீக்கியும் எல்லாச் செய்திகளையும் பரபரப்புக்குக் காரணமாக்கவேண்டும் என்பதுதான் "தினத்தந்தி"யின் முக்கிய குறிக்கோளாகும். பொய்மையின் துணைகொண்டு, செய்திகளைப் பரபரப்பாக்குவதோடு மட்டுமல்லாமல், அந்தப் பொய்மைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு கட்சிகளுக்கிடையே மனமாற்சரியங்களையும், பூசல்களையும், பொறாமையையும், பொச்செரிப்பையும், மோதுதல்களையும், தாக்குதல்களையும் ஏற்படுத்த வேண்டும் என்பது "தினத்தந்தி"யின் உள்நோக்கமாகும் என்பதை எவரும் எளிதில் அறிந்துகொள்ளலாகும். "தினத்தந்தி"யின் இந்தப் பண்புகளை நன்கு தெரிந்துகொண்டோர், அறிஞர் அண்ணாவின் கூற்று மாற்றிக் கூறப்பட்டது கண்டு வியப்படையமாட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் பேசாத ஒன்றைப் பேசியதாகக் குறிப்பிட்டிருப்பதுதான் "தினத்தந்தி"யின் தனிச்சிறப்புப்பண்பாகும்! இப்படித்தான் அதில் வெளி வருவன பலவும்.

திருச்சிக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், திராவிடநாடு பிரிவினைப் பிரச்சினை ஐக்கியநாடுகள் சபைக்குக் கொண்டுபோகப் படுமா என்று கேள்வி கேட்கப்பட்டபோது, வசதியும் வாய்ப்பும், காலமும் கருவியும் ஒன்று சேர்ந்துவந்து எய்தும்போது ஐக்கியநாடுகள் சபைக்குப் போவோம் என்று பதிலிறுத்தார்கள். கவர்னர் சம்பளக் குறைப்புப் பற்றிப் பேசும்போது, கவர்னருக்குச் சம்பளத்தை அள்ளிக்கொடுப்பது சென்னை அரசாங்கமாக இருப்பதால், அதனை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படக் கூடும், அது எந்தவகையிலும் தவறுடையதாகாது என்னும் கருத்துப்பட பேசியுள்ளார்கள். இரண்டு பிரச்சினைகளும் தனித்தனியானவை ; அறிஞர் அண்ணா அவர்கள் திருச்சிக் கூட்டத்தில் அவைகளைத் தனித்தனியாகத் தான் குறிப்பிட்டார்கள். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது போலவும், குலாம்காதருக்கும் கோகிலாஷ்டமிக்கும் தொடர்பு ஏற்படுத்துவதுபோலவும், மேற்கண்ட இரண்டு பிரச்சினைகளுக்கும் முடிச்சுப்போட்டுள்ளது "தினத்தந்தி". இது அதன் வழக்கமான பண்பு ! ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் !

கவர்னர் சம்பளத்தைக் குறைப்பதையும், ஐக்கியநாடுகள் சபைக்குச் செல்வதையும்

ஒன்றுக்கிக் கூறின கூற்று, "தினத்தந்தி"யின் கைச்சரக்கு ஆகும். அடிப்படைச் செய்தியே பொய்மையானது என்று புகலப்பட்டுவிட்டதால், அதன்மீது எழும் வினாக்களும் பொருளற்றனவாதலே உண்மையாகும்.

"தினத்தந்தி"யின் செய்திகளை அடிப்படையாகவோ அல்லது ஆதாரமாகவோ கொள்ள அறிவுடையார் ஒருநாளும் ஒருப்படார்; ஒருப்படவும் கூடாது. "தினத்தந்தி"யை ஆதாரமாகக் கொண்டு வினா எழுப்ப முனைவதோ, விடைகாண முற்படுவதோ பயனற்றது என்பதைப் பொதுமக்கள் உணர்வார்களாக!

ஃ ஃ ஃ

திராவிடநாடு பிரிவினைப்பிரச்சினையை ஐக்கிய நாடுகள் அவைக்குக் கொண்டுசெல்வது என்பது இயலுவதொரு செயலா?

ஐக்கியநாடுகள் அவை உலகில் அமைதி உண்டாக்கவும், போர் மூளாமல் தடுக்கவும், உரிமை பறிபோகாமல் காக்கவும், அடிமை நாடுகளுக்கு விடுதலை வாங்கி வழங்கவும், நாடுகளின் நலம் பேணவும் ஆன சிலபல நற்பணிகளைப் புரியவே நின்று நிலவிவருகிறது.

இந்தோனேஷியா, பாலஸ்தீன், காஷ்மீர், கொரியா, இந்தோ-சைனா போன்ற நாடுகள் தம்முடைய உரிமைப்பிரச்சினைகளை ஐக்கிய நாடுகள் அவைக்குக் கொண்டுவரத் தயங்கியதில்லை; அது இயலாததொரு செயலாக அவைகளுக்குப் படவில்லை; ஐக்கிய நாடுகள் அவையும் தன்னால் இயன்ற ஒத்துழைப்பை அந்தநாடுகளுக்குத்தர முன்வராமலிருந்ததில்லை. அந்த நாடுகளுக்கெல்லாம் ஏற்பட்ட வாய்ப்பு, திராவிடநாட்டுக்கு ஏற்படக் கூடாதா?—ஏற்படாமல் போய்விடுமா? இன்றில்லாவிட்டாலும் இன்னும் சிலகாலங்கழித்தாவது, திராவிடம் தன் குறையை ஐக்கியநாடுகள் அவையில் வைத்து, நிறைவு பெறுவதற்கான வலிவையும், வசதியையும் பெறக்கூடுமே! அல்லது திராவிடத்தில் ஏற்படும் கிளர்ச்சியையும், கொந்தளிப்பையும் கண்டு, இந்தியத் துணைக்கண்டத்தில் அமைதியை நிலைநாட்ட ஐக்கியநாடுகள் அவையே திராவிடநாடு பிரிவினைப் பிரச்சினையில் தலையிட்டாலும் தலையிடக்கூடுமே! திராவிடநாடு பிரிவினைப் பிரச்சினையை ஐக்கியநாடுகள் அவைக்குக் கொண்டு செல்வது என்பது ஆகாத செயலொன்றுமன்று காதே! திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள், திராவிடநாடு பிரிவினைப் பிரச்சினையை ஏந்தி ஐக்கிய நாடுகள் அவைக்குப் போவேன் என்று கூறுகிறாரென்றால், வசதியும் வாய்ப்பும், கருவியும் காலமும் ஏற்படும்போது அதனை உறுதியாகச் செய்து தீருவார் என்று பொருள்; அதற்கான சூழ்நிலையை உருவாக்குவார் என்று பொருள். இதனைக் குறைமதியுடையோரைத் தவிர ஏனையோர் கேலிசெய்ய ஏதுவில்லையே!

முதன் முதலில், அமெரிக்காவில், சான் பிரான்ஸிஸ்கோவில் கூடிய ஐக்கிய நாடுகள் மாநாட்டிற்குச் சென்றிருந்த முஸ்லீம் லீக் உறுப்பினரான ஸர் பிரோஸ்கான் நூன், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, பாகிஸ்தான் பிரிவினை பிரச்சினையைப் பற்றி ஐக்கிய நாடுகள் அவையில் வெளியிட்டதை யாரும் அவ்வளவு விரைவில் மறந்திருக்க முடியாது. திராவிடநாடு பிரிவினைப் பிரச்சினைக்கு அந்த அளவு வாய்ப்பு ஏற்படாது என்று எவர்தான் துணிந்து கூறமுடியும்? எனவே பிரிவினைப் பிரச்னையை ஏந்தி ஐ. நா. அவைக்குச் செல்வது என்பது இயல்வதானதொரு செயலே!

ஃ ஃ ஃ

தஞ்சையில் அண்மையில் நடைபெற்ற சீர் திருத்தத் திருமணம் ஒன்றில் குத்தூசியாரும், பெரியாரும் பார்ப்பனீயத்தை எதிர்ப்பதாகக் கூறியுள்ளனரே, அது தி. மு. கழகத்திற்கு எந்த வகையிலே மாறுபட்ட கருத்தாகும்?

தஞ்சையில் நடைபெற்ற சீர்திருத்தத் திருமணம் ஒன்றில், "பார்ப்பனர்கள் சமஸ்கிருத சுலோகங்களோடு திருமணச் சடங்குகள் செய்வதை விட்டுவிடட்டும், அவர்களே வந்து சீர்திருத்தத் திருமணங்களை நடத்தட்டும். நாம் வரவேற்கத் தயாராயிருக்கிறோம். அப்பொழுது பார்ப்பனர்களை யாரும் வேண்டாம் என்று சொல்லப்போவதில்லை" என்று குத்தூசியாரும், "தோழர் குருசாமி சொன்னதுபோல் பார்ப்பனர்கள் நம் மொழியில் எதையும் நடத்தவும், அதோடு நம்மைத் தொடவும், ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடவும் தயார் என்றால், சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், பார்ப்பான் மனிதனாக நம்வீட்டுக்கு வருவதானால், நாம்

"மறுக்கவில்லை" என்று பெரியாரும் பேசிய பேச்சுகள் செய்தித்தாள்களில் வெளிவந்திருப்பது நமக்கு மிக்க மகிழ்ச்சியை அளிப்பனவேயாகும். செய்தித்தாள்களால் மட்டுமல்லாமல், பேச்சுக்களை நேரிலே சென்றிருந்து கேட்டு மகிழ்ந்தவர்களாலும் மேற்கண்ட செய்திகள் அறிவிக்கப்படும்போது, நாம் மகிழ்ச்சியுறாமல் இருக்கமுடியாது. திராவிட முன்னேற்றக் கழகம் இத்தகைய செய்திகளை என்றும் போற்றியே வந்தது; இன்றும் போற்றுகிறது. இந்த வகையில் குத்தூசியாரும், பெரியாரும் உள்ளக்கிடக்கையை உள்ளவாறு வெளிப்படுத்தினமைக்காக நாம் அந்த அளவுக்கு அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பார்ப்பனீய ஒழிப்புதான் தங்கள் குறிக்கோளே ஒழிய பார்ப்பனர் ஒழிப்பு அல்ல என்பதைக் குத்தூசியாரும், பெரியாரும் நிலைநாட்டிவிட்டார்கள். பார்ப்பனர்கள் தங்கள் பார்ப்பனீயத்தை விட்டுவிட்டு மனிதர்களாக மாற வேண்டும் என்பதற்காகவும், பார்ப்பனர்கள் அச்சுறுத்தப்பட்டால்தான் வழிக்கு விரைவில் வருவார்கள் என்பதற்காகவும் பெரியாரும், குத்தூசியாரும் அவ்வப்போது விடும் "வெத்து வேட்டுக்களை"ச் சில 'அப்பாவிகள்' உண்மை என்று நம்பி, பார்ப்பனர்களைப் பூண்டோடு விரட்டுவோம், குத்துவோம், வெட்டுவோம், அவர்கள் வீடுகளுக்குப் பெட்ரோல் ஊற்றித் தீவைத்துக் கொளுத்துவோம் என்று உளறிக் கொட்டி வருகிறார்கள். அவர்களுக்கு தஞ்சைத் திருமணத்தில், குத்தூசியார்—பெரியார் ஆகிய இருவரும் பேசிய பேச்சுக்கள், நல்ல தெளிவு பயந்து, நல்லறிவு புகட்டும் என்று கருதுகிறோம்.

பார்ப்பனர்களிடத்திலுள்ள பார்ப்பனீயம் ஒழிக்கப்படவேண்டும்; அவர்கள் மனிதர்களாக மாற்றப்படவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஓயாது ஒழியாது கூறிவரும் இக்கருத்தைத்தான் குத்தூசியாரும், பெரியாரும் தஞ்சைத் திருமணத்தில் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். குத்தூசியார்—பெரியார் ஆகியோரின் உள்ளக்கிடக்கையை நன்கு உணர்ந்துகொள்ளமுடியாத சில திராவிடக் கழகத் தோழர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆங்காங்கு எதிர்க்கத் தலைப்பட்டனர். "அப்பொழுது பார்ப்பனர்களை யாரும் வேண்டாம் என்று சொல்லப்போவதில்லை" என்று குத்தூசியார் கூறியுள்ளதையும், "பார்ப்பான் மனிதனாக நம் வீட்டுக்கு வருவதானால் நாம் மறுக்கவில்லை" என்று பெரியார் கூறியுள்ளதையும் திராவிடக் கழகத் தோழர்கள் பல தடவைத் திரும்பத் திரும்ப படித்துணர்வார்களேயானால், வெறுக்கவேண்டியது பார்ப்பனீயமே ஒழிய, வெறுக்கவேண்டியவர்கள் பார்ப்பனர்கள் அல்லர் என்ற முடிவுக்கு எளிதில் வந்துவிடுவார்கள்.

பார்ப்பனர்களைக் குத்துவது, வெட்டுவது, விரட்டுவதுதான் தம் கொள்கை என்று பெரியார் கொண்டிருந்திருப்பாரேயானால், அவர் அன்பர் ஆச்சாரியாரைச் சந்தித்தபோதே கத்தியால் ஆச்சாரியார் வயிற்றில் ஒரு சொருகு சொருகியிருந்திருப்பார்; மாவூர் சர்மா, கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகள், கல்யாணராம அய்யர், பார்ப்பன அதிகாரிகள், பார்ப்பன ஆசிரியர்கள் ஆகியோரைச் சந்திக்கும்போது அவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்தியிருந்திருப்பார்; ஈரோடு மகாஜன உயர்நிலைப்பள்ளி, கல்லூரியிலிருந்தெல்லாம் பார்ப்பன ஆசிரியர்களை விந்தியமலைக்கு அப்பால் செல்லும்படி விரட்டிவிரட்டி யடித்திருந்திருப்பார்; ஈரோட்டில் தம் சொந்த வீடுகளில் பார்ப்பனரைக் குடிவைக்காமல் விரட்டியடித்திருந்திருப்பார்; ஈரோட்டில் தம் வழக்குகளை நடத்த பார்ப்பன வழக்கறிஞர்களை நியமித்திருந்திருக்கமாட்டார். இவையெல்லாம் எதைக்காட்டுகின்றன என்றால் பெரியார் பார்ப்பனரை வெறுக்கவில்லை என்பதையேயாகும். அதுபோலவே குத்தூசியார், பார்ப்பனரைக் குத்துவது, வெட்டுவது, விரட்டுவது ஆகிய செயல்களைத் தம் குறிக்கோளாக வைத்திருந்தால், இது நேரம் சென்னை நகரில் எவ்வளவோ பார்ப்பனர்களை வெட்டி வீழ்த்தியிருந்திருப்பார்; அவரைச் சந்திக்கிற, எதிர்ப்படுகிற பார்ப்பனர்கள் எவ்வளவோ பேர்களை குத்தி, வெட்டி, அடித்துத் துரத்தியிருந்திருப்பார். எனவே குத்தூசியார்—பெரியார் ஆகிய இருவருடைய நடவடிக்கையும்—தஞ்சைத் திருமணப்பேச்சும் பார்ப்பன துவேஷத்தை வற்புறுத்தவில்லை; பார்ப்பனீய துவேஷத்தையே வற்புறுத்துகின்றன என்பது தெளிவாகும். பெரியாரும்—குத்தூசியாரும் பார்ப்பனீயத்தை வெறுப்பதாகக் கூறியுள்ள கருத்து திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு

உடன்பாடானதொன்றே யொழிய, மாறுபாடானதல்ல!

ஃ ஃ ஃ

பெரியார் இராமசாமி திராவிட முன்னேற்றக் கழகத்தை இழி சொற்களால் தூற்றுகிறாரே அது குறித்துத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்செய்வது ?

பெரியார் இராமசாமி நமக்கு விட்டகுறை-தொட்டகுறை தலைவர் என்ற முறையில் அவ்வளவையும் தாங்கிக்கொள்ளும் உள்ள உரம் பெறவேண்டும்; நாம் மேலும் மேலும் ஓயாமல் பணிபுரியவேண்டும் என்பதற்காகவே தந்தையார் தூற்றுகிறார் எனக்கொள்ள வேண்டும்.

துன்பம் செய்யும் ஒருவருக்கு அளிக்கும் தண்டனை அவருக்கு நன்மையையே செய்து காட்டுதல் என்னும் கருத்துப்பட அமைந்த "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண, நன்னயம் செய்து விடல்" என்ற வள்ளுவனாரின் வாக்கைத்தான் நாமும் வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும். பெரியாரின் கொள்கைகளும், போக்குகளும் எந்த அளவுக்கு நமக்குப் பொருந்தி வருகின்றனவோ அந்த அளவுக்கு அவற்றை நாம் போற்றிக் காப்பாற்றிவருவோமாக! திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய 'சனியன்கள்' தொலைந்த பிறகே கழகம் தூய்மை அடைந்துள்ளதாகப் பெரியார் இராமசாமி அவர்கள் கருதியுள்ளதால், அவர் கருத்துக்கு மதிப்பு அளிக்கும் வகையில் நாம் நமது கடமையைக் கண்ணியம்—கட்டுப்பாடு—நேர்மை—நியாயம் ஆகிய வழிகளின் வழியே ஆற்றிச் செல்வோமாக!

ஃ ஃ ஃ

பாம்பினிடத்தில் எப்படி நஞ்சு இருக்கிறதோ அப்படியே பார்ப்பனரிடத்தில் பார்ப்பனீயமிருக்கிறது; நச்சுப்பாம்பை எப்படி ஒழிக்கிறோமோ அப்படித்தானே பார்ப்பனரையும் ஒழிக்கவேண்டும்?

நாம் பாம்பினை வெறுக்கிறோம் என்றால், அது 'பாம்பு' என்பதற்காக வெறுப்பதில்லை; அதனிடத்தில் 'நஞ்சு' இருக்கிறது என்பதற்காகவே அதனை வெறுக்கிறோம். பாம்பினிடத்தில் நஞ்சு இல்லையென்றால், நாம் அதனை ஒரு மரவட்டையைப்போல்தான் எண்ணுவோம். நல்ல பாம்பை நாம் வெறுக்கிற அளவுக்கு, நீர்ப்பாம்பை நாம் வெறுப்பதில்லை; கண்டு அஞ்சுவதில்லை. காரணம் நல்லபாம்பினிடத்தில் நஞ்சு உண்டு; நீர்ப்பாம்பினிடத்தில் அது இல்லை.

நஞ்சு எப்படி நம்மால் வெறுக்கத்தகுந்த அஞ்சத்தகுந்த ஒரு பொருளாக இருந்துவருகிறதோ அதுபோலவேதான், பார்ப்பனீயமும் நம்மால் வெறுக்கத்தகுந்த, அஞ்சத்தகுந்த ஒருபொருளாக இருந்து வருகிறது. நஞ்சு அகற்றப்பட்ட பாம்பைப்பற்றி நாம் எப்படி அச்சங்கொள்வதில்லையோ, அப்படியே பார்ப்பனீயம் அகற்றப்பட்ட பார்ப்பனரைப் பற்றியும் நாம் அச்சங்கொள்ளத் தேவையில்லை.

பார்ப்பனர்களிடத்தில் பார்ப்பனீயம் இருக்கும் காரணத்தால்தான் நாம் பார்ப்பனரைக் கண்டு வெறுக்கவேண்டி ஏற்படுகிறதே யொழிய, அவர்கள் பார்ப்பனர்களாகிய மனிதர்கள் என்பதற்காக அல்ல. பார்ப்பனீயம் ஒழிக்கப்பட்டால்தான் நாம் எதிர்பார்க்கும் பலன் ஏற்படுமேயல்லாது, பார்ப்பனர் ஒழிக்கப்பட்டால் ஏற்பட்டுவிடாது. ஏனெனில், பார்ப்பனரை யடுத்து, முதலியார், செட்டியார், நாய்க்கர், பிள்ளை, படையாச்சி, கள்ளர், மறவர், தேவர், நாடார் போன்ற பல்வேறு பார்ப்பனரல்லாதாரிடத்தில் பார்ப்பனீயம் குடிகொண்டிருக்கவே செய்கிறது. முதலியார், செட்டியார், நாய்க்கர் போன்றாரிடமுள்ள பார்ப்பனீயத்தை ஒழித்துவிட்டு அவர்களை மனிதர்களாக்க எப்படி முயலுகிறோமோ, அப்படியே, சற்றுகூட முயன்று பார்ப்பனரையும் மனிதர்களாக்க வேண்டும் என்று கூறுகிறோம்.

எல்லா உயிர்களிடத்திலுமுள்ள நஞ்சு எப்படி அகற்றப்படவேண்டியதொன்றோ, அப்படியே எல்லோரிடமிருந்தும் பார்ப்பனீயம் அகற்றப்படவேண்டிய தொன்றாகும்.

எல்லா நன்மையையும் செய்

" உன்னால் முடிந்த எல்லா நன்மையையும் செய்
உன்னால் முடிந்த எல்லாவழிகளிலும் செய்
உன்னால் முடிந்த எல்லா இடங்களிலும் செய்
உன்னால் முடிந்த எல்லா நேரங்களிலும் செய்
உன்னால் முடிந்த எல்லா மக்களுக்கும் செய்
உன்னால் முடிந்த காலம்வரையில் செய்"

—ஜான் வெஸ்லி.

எல்லாம் இயற்கையே

[இரா. நெடுஞ்செழியன்]

இயற்கை தனக்குத்தானே சிலபல நிலைத்த விதிகளைக் கொண்டிருக்கிறது. அந்த விதிகளின்படியே இயங்கிவருகிறது. அப்படிப்பட்ட இயற்கைவிதிகள் ஏன் தோன்றின? எவருக்கும் தெரியவில்லை! அவைகள் எதற்காக நின்று நிலவவேண்டும்? யாருக்கும் புரியவில்லை! ஆனால் அவைகள் எப்படி இருக்கின்றன? அதை மட்டும் சிறிது சிறிதாகக் கண்டறிந்து கூறுவதிலே சிறிதளவு வெற்றி பெற்றிருக்கின்றனர் அறிவியல் அறிஞர்கள். அவர்கள் கண்டறிந்து கூறவேண்டியவைகள் இன்னமும் ஏராளமாக இருக்கின்றன. அந்த முயற்சியில் அவர்கள் இடைவிடாமல் ஈடுபட்டுக்கொண்டே இருக்கின்றனர்.

அறிவியல் அறிஞர்களுக்குப் புரியாதவைகளையும் தெரியாதவைகளையும் ஆத்மீகவாதிகள் தாம் ஏற்கனவே கண்டறிந்துவைத்துள்ளனரே என்று சிலருக்குக் கூறத்தோன்றும். ஆத்மீகவாதிகள் அறிந்தனவாகவும், தெரிந்தனவாகவும் கூறிய பலப்பல, அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகளுக்குப் பிறகு அடியற்ற நெடுமரம்போல் சாய்ந்துவிட்டன. அவைகள், ஆத்மீகவாதிகளால், அவர்தம் மனம்போன போக்கில் புனைகிவைக்கப்பட்ட புனைகதைகள் என்பதை, அறிவியல் கண்டுபிடிப்புகள் வெட்ட வெளிச்சமாக்கி வருகின்றன.

அறிவியல் ஆராய்ச்சி அறிவுக்கு எட்டிய வரையில், இன்றைய நிலையில், இயற்கையின் அடிப்படைத் தோற்றமாகக் காணப்படுவன, அணுக்களினுள் அணுக்களாய் விளங்கும் நுண்ணணுக்களேயாகும். அப்படி நுண்ணணுக்களாய் விளங்கிய இயற்கை, தனக்குத்தானே விதித்துக்கொண்ட விதிகளுக்கேற்ப, பல்வேறு மாற்றங்களுக்குத் தன்னை ஆளாக்கிக்கொண்டு, பல்வேறு கூறுபாடுகளாய்ப் பிரிந்து நின்று, பல்வேறு உருவங்களைக் கொண்டதாய் நின்று நிலவிவருகிறது. இயற்கையின் அடிப்படைத் தோற்றமாக விளங்கும் நுண்ணணுக்கள், தனித்தனி முதலணுக்களாகி, விசும்பாகி, வளியாகித், தீயாகி, நீராகி, நிலமாகி, நிலத்திலே அணுக்களின் சேர்க்கைப் பொருள்களாகிப், பாசியாகிப், புல்லாகிப், பூடாகி, மரமாகி, நீர்வாழ்வனவாகி, நிலமூர்வனவாகிப், பறவையாகி, விலங்காகிக், குரங்காகி, வாலில்லாக் குரங்காகிக், கொரில்லாவாகி, மனிதனாகி எல்லாவிதத் தோற்றங்களிலும் காட்சியளிக்கின்றன. இயற்கையின் ஒருவகைக் கூறுபாடுகளாக விளங்கும் முதலணுக்கள் இயற்கையின் விதிக்கேற்ப தேவையான வழித் தேவையான அளவுக்குக் கூடியும், தேவையற்றவழித் தேவையான அளவுக்குப் பிரிந்தும் தம் உருத்தோற்றங்களை மாற்றிக்கொள்ளவும் செய்கின்றன.

இந்த முறையில் பார்த்தால் மனிதன் இன்றியமையா இயற்கைச் சூழ்நிலைகளின் படைப்பு என்பது தெளிவாகும். இயற்கையின் கூறுபாடுகளிலே மிக வளர்ச்சியுற்ற படைப்பாக விளங்கி வருபவன் மனிதனாவான். மனிதன் இயற்கை விதிகளின் ஒத்துழைப்பின்பேரில் செயற்கைகளைச் செய்கிறான். இயற்கை—செயற்கைச் சூழ்நிலைகளால் மனித சமுதாயம் உருப்பெற்று வளர்ந்தோங்கி வந்துகொண்டிருக்கிறது.

உலகில் தோன்றியுள்ள ஒவ்வொருவரும் இயற்கை—செயற்கைச் சூழ்நிலைகளுக்குக் கட்டுப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பிறக்கும்போது சிலபல குறைபாடுகளோடு பிறக்கிறார்கள். அந்தக் குறைபாடுகளுக்கு அவர்கள் எந்தவிதத்திலும் பொறுப்பாளிகளாவதில்லை. ஒவ்வொரு மனிதனுடைய இயல்புக்காகவும் இயற்கை தனியே கவலைப்பட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பதாகத் தெரியவில்லை; ஒவ்வொரு உயிர்வகைக்காகவும் அது கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. அதற்குக் காரணம் இயற்கையே அவைகளாக மாறியிருப்பதுதான், இயற்கை ஓரிடத்தில் உட்கார்ந்து

கொண்டு, தன் விருப்பப்படி அண்டபிண்ட சராசரங்களை இயக்கிக்கொண்டிருக்கவில்லை; இயற்கையே அண்டபிண்ட சராசரங்களாக இயங்கிவருகிறது. மனிதன் இயற்கையின் கூறுபாடுகளிலே ஒன்று ஆவான். இயற்கையின் ஒரு கூறுபாடு, மற்றொரு கூறுபாட்டோடுத் தொடர்புற்று இருப்பதும், தொடர்பு இன்றி இருப்பதும், ஒரு கூறுபாடு மற்றொரு கூறுபாட்டைக் கூட்டுவதும், குறைப்பதும், திருத்துவதும், மாற்றுவதும் இயற்கையின்பாற்பட்ட விதிகளாகும். அந்த விதிகளுக்கேற்ப மனிதன் சிலபல செயற்கைகளைச் செய்யமுடிகிறது. ஏதோவொன்று எங்கேயோ இருந்துகொண்டு மனிதனைத் தன் விருப்பப்படி ஆட்டிப்படைப்பதில்லை; இயற்கையேதான் மனிதனை இயங்கி வருகிறது. உலகில் இருக்கும், நிகழும் எல்லாமும் இயற்கையே!

ஒரு உயிர் மற்றொரு உயிரை உற்பத்தியாக்குவதும், உற்பத்தியாக்கின ஒன்று பிறகு இறந்துபடுவதும், அந்த உயிர் உணர்வதும், எண்ணுவதும், செயலாற்றுவதும் போன்ற எல்லாம் சூழ்நிலைகளாலும், எண்ணிறந்த முன்னைய தொடர்புகளாலும், எண்ணிறந்த உடன் நின்று நிலவும் உண்மைகளாலும் உருவாக்கப்படுகின்றன—உறுதி செய்யப்படுகின்றன. நிகழ்காலம்—ஒரு குழந்தை. அது, எல்லா இறந்தகாலமும், வழிவழியாகப் பெற்றெடுத்த இன்றியமையாக் குழந்தையாகும். அதுவே, வழிவழியாகவரும், வருங்காலம் எல்லாவற்றிற்கும் அமைந்த இன்றியமையாத் தாயுமாகும்.

உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியாக இருக்கவே விரும்புகிறான். இன்பம்தான் அவன் வாழ்க்கையின் குறிக்கோள். அவன் எங்கும், எப்பொழுதும், எல்லாத் துறைகளிலும் இன்பம் நுகர்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கிறான். அவன் உண்டியாலும், உறையுளாலும், ஆடை அணிகளாலும் தன் உடலின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறான். அவன் உள்ளத்தின் பசியைத், தன் தகுதிக்கேற்பக் காதலன்பாலும், அறிவாராய்ச்சியாலும், தத்துவத்தாலும், கொள்கையாலும், கலையாலும், இசையாலும் இன்னபிறவற்றாலும் தீர்த்துக்கொள்ள விரும்புகிறான்.

காட்டுமிராண்டிக் காலத்தில் வாழ்ந்த மனிதனின் தேவைகள் மிகக் குறைவாகும். ஆனால் நாகரிகம் வளரவளர மனிதனின் தேவைகளும் வளர்ந்துவிட்டன. உடலின்பத்திற்கான தேவைகள் கணக்கற்ற வகையில் பெருகிவிட்டன. அறிவுக்கண்ணின் பார்வை அகன்று கொண்டே போகிறது. மனிதனின் மூளை மேலும் மேலும் கண்டறியத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது.

காட்டுமிராண்டி உணர்ந்தான்; ஆனால் அவ்வளவாகச் சிந்திக்கவில்லை. அவன் உணர்ச்சி வயப்பட்டவனேயல்லாமல் அறிவுவழிப்பட்டவனல்லன். ஒரு காட்டுமிராண்டியின் உணர்ச்சி அவனது சிந்தனையால் பாதிக்கப்படுவதில்லை; அதேபோது ஒரு தத்துவாசிரியரின் சிந்தனை அவரது உணர்ச்சியால் பாதிக்கப்படுவதில்லை. இயல்பாக நாம் வாழ்க்கையில் பார்க்கிறோம், குழந்தைகள் விருப்பங்கள் பல கொள்ளுகின்றன; உணர்ச்சிகள் வயப்படுகின்றன. குழந்தைகள் பகுத்தறிந்துகொள்ளும் பண்பு பெறுவதற்கு முன்னால் இந்த முறையிலேயே நடந்துகொள்கின்றன. ஒரு மனிதனின் வாழ்நாளின் ஆரம்ப நிலையைப்போலவே, மனித சமுதாயத்தின் ஆரம்பக்கால நிலையும் விருப்பங்களாலும், உணர்ச்சிகளாலேயுமே ஆட்டிப்படைக்கப்பட்டது.

காட்டுமிராண்டி, பொருள்களின் தோற்றங்களாலும், அவைபற்றி அவன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளாலுமே அடக்கி ஆளப்பட்டான். அப்பொழுது அவன் ஆராய்ந்து பார்க்கும் மனவலிவு அற்றவனாக இருந்துவந்தான். செயலாற்றும் திறன் அவனிடம் மிகுத்துக் காணப்படவில்லை. அவனது உள்ளம் எதனையும் துருவிப்பார்க்கும் திறனைப் பெற்றதில்லை. ஏற்படும் தடைகளையெல்லாம் மீறி எதனையும் கண்டறிய அவன் தன் மூளையைப் போட்டுக் குழப்பிக்கொண்டதில்லை. அவன் தன் உள்ளத்தை, அது போனபோக்கிலே, தடை ஏதும் அற்ற வழியிலேயே செலுத்த விரும்பினான். பொருள்களெல்லாம் எப்படி அவனுக்குத் தோற்றமளித்தனவோ, அப்படியே அவனது மனதிலும் பட்டன. பொருள்களின் காரண காரிய விளக்கங்களைக் கண்டறிந்துகொள்ளும் அறிவுத்திறன் அவனுக்கு ஏற்படவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் அவனுக்குப் பட்டது. தான் எப்படி ஒரு பொருளை உண்டாக்கவும், ஒரு செயலைச் செய்

307

யவும் காரணமாக இருந்தானோ, அப்படியே உலகில் தென்படும் எல்லாப் பொருள்களுக்கும், எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஒரு காரணகர்த்தா இருக்கவேண்டும்; அதுவும் இயற்கைக்கு மீறிய ஒன்றாக இருக்கவேண்டும்; அதுவும் கண்ணுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்றெல்லாம் மனம்போன போக்கில் எண்ணினான். இயற்கைக்கு மீறிய ஒன்றின் மீது நம்பிக்கை கொள்ளும் பழக்கம் நாளடைவில் அவனுக்கு இயல்பாக ஏற்பட்டது. காட்டுமிராண்டியைச் சுற்றித் தொல்லைகளும் தீமைகளும் ஏராளமாக மலிந்திருந்ததால், அவற்றினின்றும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நெருக்கடியான கட்டங்கள் அவனுக்கு அடிக்கடி ஏற்பட்டன. அப்பொழுதெல்லாம் தன்னைவிட வலிமைமிக்க ஒருவனின் அல்லது ஒன்றின் துணையை நாடவேண்டிய இன்றியமையாமை அவனுக்கு ஏற்பட்டது. கண்ணுக்குத் தெரியாத—இயற்கைக்கு மீறிய ஒன்றின்மீது நம்பிக்கை கொண்டிருந்ததால், அதன் உதவியைப்பெற பலவழிகளிலும் முயன்றான். முடிவு எப்படி இருந்தாலும்—நிகழ்ந்தாலும், இயற்கையைக் கடந்த பொருளாகிய கடவுளின் உதவி தனக்குக் கிடைப்பதாகவே நினைத்தான்; அதனால் சிறிதளவு மன அமைதி பெற்றுக்கொண்டான். நிலைமை நன்மையாக முடிந்தால், கடவுள் தன்னிடம் அன்பு செலுத்துகிறார் என்று எண்ணிக்கொண்டான்; நிலைமை தீமையாக முடிந்தால், கடவுள் தன்னிடம் சினங்கொள்ளுகிறார் என்று எண்ணிக்கொண்டான். அன்பின் காரணமாகவும், அச்சத்தின் காரணமாகவும் கடவுளை வழிபடவேண்டிய நிலைமைக்கு அவன் இழுத்துச்செல்லப்பட்டான். அவனுடைய பிள்ளைகள் அவனைப் பார்த்துக் கடவுளைத் தொழக் கற்றுக்கொண்டார்கள். பிறகு பல காலங்களிலும் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்த பல்வேறுவகையான மக்களும், பல்வேறு வகையானக் கடவுள்களைப் பல்வேறுவிதங்களில் கொண்டாடத் தலைப்பட்டனர். கடவுளை எல்லோரும் நம்பினர்! அவ்வளவுதான்! நம்பிக்கைக்கு முழு ஆதிக்கம் ஏற்பட்ட இடத்தில் அறிவு ஆராய்ச்சிக் காரணகாரிய விளக்கத்திற்கு இடம் ஏது? கடவுள் நம்பிக்கையாளர்கள் அத்துணைப்பேரும் கருத்தில் தம்முள் பெரும்வகையில் ஒத்துவருவதில்லை; ஆனால் நன்மை தீமைகள் அவரவர் நம்பிக்கையின் அளவைப்பார்த்து நெருங்குவதில்லை; எல்லோரையும் ஒருபடியாகத் தாக்கத்தான் செய்கின்றன. அதுபோலவே கடவுள் நம்பிக்கையாளர்களையும்—கடவுள் நம்பிக்கையற்றவர்களையும், சமுதாய வாழ்க்கையில் ஏற்படும் நன்மைதீமைகள், ஏற்றத்தாழ்வு பார்க்காமல் ஒருபடியாகத் தாக்கத்தான் செய்கின்றன. கடவுள் நம்பிக்கை எந்த நிலைத்த உறுதியையும் அளித்ததில்லை! அப்படியிருந்தும் கடவுள் நம்பிக்கை பெரும்பாலான மக்களிடத்தில் அழிந்தபாடில்லை! காரணம் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து வழிவழித் தலைமுறையாக ஊறிப்போன ஆழ்ந்த நம்பிக்கை இன்னமும் பெரும்பாலோரிடத்தில் மிகுத்துக் காணப்படுவதேயாகும்! கடவுளின் உதவியைக் கற்பனை செய்துகொள்வதன்மூலம் அத்தகையோர் மன அமைதிபெற முயல்கின்றார்கள்! மனத்தெளிவும், துணிவும் அற்றவர்களுக்குக் கற்பனைக் கடவுளின் நம்பிக்கை தானே ஊன்றுகோலாக அமைந்திருக்கமுடியும்! இயல்பாகவே அத்தகையோரின் எண்ணிக்கை உலகில் மிகவானதால், நம்பிக்கை எங்கணும் பெரும்வகையில் பரந்து காணப்படுகின்றது!

கடவுள் நம்பிக்கைபடியப்படிய எண்ணிறந்த கோயில்களும், பலிபீடங்களும் ஆங்காங்குக் கட்டப்பட்டன. காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து, மக்கள், பலியிடுவதாலும் பாட்டுப் பாடுவதாலும், தியாகம் செய்வதாலும் திருவிழாக் கொண்டாடுவதாலும், நன்றி காட்டுவதாலும், நல்வாழ்த்து வழங்குவதாலும் கடவுளைத் தொழுதுவரலாயினர். இப்படிப்பட்ட எல்லாவற்றிற்கும் அறியாமைதான் காரணம். அறியாமையைக் காட்டிலும் ஆரிருள் வேறொன்று இருக்கமுடியாதல்லவா!

இப்படிப்பட்ட இறந்தகாலத்திலெல்லாம், மனிதனின் மூளை, மெல்லவும், பல நெருக்கடிகளுக்கிடையேயும் வளர்ந்துவரவேண்டியதாயிற்று. மனிதனின் உள்ளம் சிறிது சிறிதாக அவனது உடலோடு ஒத்துழைக்கத் தலைப்பட்டது. எண்ணம் தொழிலுக்கு நெருங்கிய நண்பனாக வாழ முயன்றது. மனிதன் எந்த அளவுக்குத் தன் எண்ணத்தைத் தொழிலோடு தொடர்புபடுத்த முற்பட்டானோ, எந்த அளவுக்குத் தன் மூளைக்கும் கைகளுக்கும் நட்பு வளர்க்கத் தலைப்பட்டானோ, அந்த அளவுக்கு அவன் வளர்ச்சியுற்றவனாகக் கருதப்பட்டான்.

மணம் முடிக்க மனம்

[எழினி]

கடற்கரை. அதனை அடுத்து இளமரச் சோலை. சோலையின் நடுவே சிறுசிறு குடிசைகள், நண்பகல்வேளை. தாங்கமுடியாத வெய்யிலின் கொடுமை. அந்தக் கொடுமையை மேலிழுந்தவாரியாகத் தணிக்கும் வகையில் குளிர்ந்த காற்று கடலிலிருந்து வீசுகிறது. மீன் பிடிப்பதற்கு இதுவே பொழுதென்று கருதிச்செம்படவர்கள் மீன் வலையைக் கையிலேந்திக்கொண்டு குடிசைகளினின்றும் வெளியேறுகின்றனர்.

கடலிலே அலையின் கொந்தளிப்பும், காற்றின் விசையும் மிகவாக இருக்கின்றன. காற்றின் விசை தணியவும், அலையின் கொந்தளிப்பு அடங்கவும் ஆன நிலையை எதிர்பார்க்கவேண்டியவர்களாகின்றனர் செம்படவர்கள். கடற்கரையின் சுடுமணலிலே நிற்கமுடியாமையால், அவர்கள் தாம் ஒதுங்குவதற்கான நிழலைத் தேடுகின்றனர். அங்கே அடர்ந்து வளர்ந்த நீல நிறத்தையுடைய புன்னை மரத்தைப் பார்க்கின்றனர். அதன் நிழலிலே போய்த் தங்குகின்றனர். கடலின் கொந்தளிப்பு அடங்குவதற்குள் முறுக்குண்டுகிடக்கும் வலையைப் பிரித்து, வெய்யலிலே உலர்த்த முற்படுகின்றனர்.

இப்படிப்பட்டக் காட்சியை ஒருநாள் அல்ல, இருநாள் அல்ல, பலநாட்கள் பார்த்திருக்கின்றனர் அந்தத் தலைவியும் தோழியும். தலைவனைக் காணவரும்போதெல்லாம் இத்தகைய காட்சி அவர்கள் கண்களுக்குத் தென்படும் அந்தப் பகுதி, தலைவனுக்கு உரிமையுடையதாக இருந்தாலும், யாரும் அறியாமல் தலைவியைக் காண அந்தப் பகுதி அவனுக்கு ஏற்றதாக இருந்தாலும், தலைவியைப் பகற்பொழுதுகளிலே அந்தப் பகுதிக்கு அடிக்கடி வரவழைப்பது தலைவனின் வாடிக்கையாகும். தலைவியும், அவளுக்குத் துணையாகத் தோழியும், தலைவன் குறிக்க குறியிடங்களில் வந்து காத்திருக்கும் போது கடற்கரைக் காட்சிகளிலே கவனம் செலுத்தியிருப்பதுண்டு.

ஒருநாள் தலைவனைக் காண தலைவியும் தோழி

இவையெல்லாம் அனுபவத்தை ஒட்டி அவனுக்கு ஏற்பட்ட விளைவுகளாகும்.

மனிதன் நிலையில் நின்று இயற்கையை நோக்கும்போது, அது அன்பு உள்ளம் படைத்ததாகவும் காணப்படுகிறது, அதேபோது இரக்கப்பண்பு அற்றதாகவும் காணப்படுகிறது; அது பெருஞ் செலவாணியாகவும் தென்படுகிறது, அதேபோது பெருங்கஞ்சனாகவும் தென்படுகிறது. இயற்கை நமக்கெல்லாம் தாயாகவும் இருக்கிறது; அறிவுபுகட்டும் ஆசிரியனாகவும் இருக்கிறது; அதேபோது மக்களையெல்லாம் ஏமாற்றுபவனாகவும் இருந்துவருகிறது. இயற்கையை மீறி நாம் மேலே ஏறிவிடவும் முடியாது; கீழே வீழ்ந்துவிடவும் முடியாது. நன்மைக்கெல்லாம் காரணமான வித்துக்களையும் அதனிடம் காணலாம்; தீமைக்கெல்லாம் காரணமான வித்துக்களையும் அதனிடம் காணலாம். நன்மை விளைவதற்கான விளைநிலமும் அதனிடம் உண்டு; அதேபோது தீமை விளைவதற்கான விளை நிலமும் அதனிடம் உண்டு. இயற்கை ஒரு பொருளை உண்டாக்குகிறது, வளர்க்கிறது, காப்பாற்றுகிறது, பின் அழிக்கிறது. அதாவது இயற்கையே ஒரு கூறுபாடாகத் தோன்றுகிறது, வளர்கிறது, வாழ்கிறது, மறைகிறது. பின் வேறொன்றாக மாறுகிறது. மனிதனின் வேண்டுகோளுக்கோ, தொழுகைக்கோ, வழிபாட்டுரைக்கோ, பலியிடுதலுக்கோ, விழாவெடுத்தலுக்கோ இயற்கை, தன் போக்கை மாற்றிக்கொள்வதில்லை. அதற்கென்று தனியாக உள்ளம் கிடையாது. அது மனிதனாகவும், பிற உயிர்களாகவும் தோற்றங் கொள்ளும்போதுதான் உணரும் உள்ளத்தைப் பெறுகிறது.

மணம் முடிக்க மனம்

[எழிலி]

கடற்கரை. அதனை அடுத்து இளமரச் சோலை. சோலையின் நடுவே சிறுசிறு குடிசைகள், நண்பகல்வேளை. தாங்கமுடியாத வெய்யிலின் கொடுமை. அந்தக் கொடுமையை மேலிழுந்தவாரியாகத் தணிக்கும் வகையில் குளிர்ந்த காற்று கடலிலிருந்து வீசுகிறது. மீன் பிடிப்பதற்கு இதுவே பொழுதென்று கருதிச்செம்படவர்கள் மீன் வலையைக் கையிலேந்திக்கொண்டு குடிசைகளினின்றும் வெளியேறுகின்றனர்.

கடலிலே அலையின் கொந்தளிப்பும், காற்றின் விசையும் மிகவாக இருக்கின்றன. காற்றின் விசை தணியவும், அலையின் கொந்தளிப்பு அடங்கவும் ஆன நிலையை எதிர்பார்க்கவேண்டியவர்களாகின்றனர் செம்படவர்கள். கடற்கரையின் சுடுமணலிலே நிற்கமுடியாமையால், அவர்கள் தாம் ஒதுங்குவதற்கான நிழலைத் தேடுகின்றனர். அங்கே அடர்ந்து வளர்ந்த நீல நிறத்தையுடைய புன்னை மரத்தைப் பார்க்கின்றனர். அதன் நிழலிலே போய்த் தங்குகின்றனர். கடலின் கொந்தளிப்பு அடங்குவதற்குள் முறுக்குண்டுகிடக்கும் வலையைப் பிரித்து, வெய்யலிலே உலர்த்த முற்படுகின்றனர்.

இப்படிப்பட்டக் காட்சியை ஒருநாள் அல்ல, இருநாள் அல்ல, பலநாட்கள் பார்த்திருக்கின்றனர் அந்தத் தலைவியும் தோழியும். தலைவனைக் காணவரும்போதெல்லாம் இத்தகைய காட்சி அவர்கள் கண்களுக்குத் தென்படும் அந்தப் பகுதி, தலைவனுக்கு உரிமையுடையதாக இருந்தாலும், யாரும் அறியாமல் தலைவியைக் காண அந்தப் பகுதி அவனுக்கு ஏற்றதாக இருந்தாலும், தலைவியைப் பகற்பொழுதுகளிலே அந்தப் பகுதிக்கு அடிக்கடி வரவழைப்பது தலைவனின் வாடிக்கையாகும். தலைவியும், அவளுக்குத் துணையாகத் தோழியும், தலைவன் குறிக்க குறியிடங்களில் வந்து காத்திருக்கும் போது கடற்கரைக் காட்சிகளிலே கவனம் செலுத்தியிருப்பதுண்டு.

ஒருநாள் தலைவனைக் காண தலைவியும் தோழி

இவையெல்லாம் அனுபவத்தை ஒட்டி அவனுக்கு ஏற்பட்ட விளைவுகளாகும்.

மனிதன் நிலையில் நின்று இயற்கையை நோக்கும்போது, அது அன்பு உள்ளம் படைத்ததாகவும் காணப்படுகிறது, அதேபோது இரக்கப்பண்பு அற்றதாகவும் காணப்படுகிறது; அது பெருஞ் செலவாணியாகவும் தென்படுகிறது, அதேபோது பெருங்கஞ்சனாகவும் தென்படுகிறது. இயற்கை நமக்கெல்லாம் தாயாகவும் இருக்கிறது; அறிவுபுகட்டும் ஆசிரியனாகவும் இருக்கிறது; அதேபோது மக்களையெல்லாம் ஏமாற்றுபவனாகவும் இருந்துவருகிறது. இயற்கையை மீறி நாம் மேலே ஏறிவிடவும் முடியாது; கீழே வீழ்ந்துவிடவும் முடியாது. நன்மைக்கெல்லாம் காரணமான வித்துக்களையும் அதனிடம் காணலாம்; தீமைக்கெல்லாம் காரணமான வித்துக்களையும் அதனிடம் காணலாம். நன்மை விளைவதற்கான விளைநிலமும் அதனிடம் உண்டு; அதேபோது தீமை விளைவதற்கான விளை நிலமும் அதனிடம் உண்டு. இயற்கை ஒரு பொருளை உண்டாக்குகிறது, வளர்க்கிறது, காப்பாற்றுகிறது, பின் அழிக்கிறது. அதாவது இயற்கையே ஒரு கூறுபாடாகத் தோன்றுகிறது, வளர்கிறது, வாழ்கிறது, மறைகிறது. பின் வேறொன்றாக மாறுகிறது. மனிதனின் வேண்டுகோளுக்கோ, தொழுகைக்கோ, வழிபாட்டுரைக்கோ, பலியிடுதலுக்கோ, விழாவெடுத்தலுக்கோ இயற்கை, தன் போக்கை மாற்றிக்கொள்வதில்லை. அதற்கென்று தனியாக உள்ளம் கிடையாது. அது மனிதனாகவும், பிற உயிர்களாகவும் தோற்றங் கொள்ளும்போதுதான் உணரும் உள்ளத்தைப் பெறுகிறது.

உனது தலைவரும் உன்னைக் காண்பதற்கான வழிவகைகளைப் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறார்! இப்படி அடிக்கடி அவர் காத்துக் கிடத்தலை அவருக்குத் தொல்லை இல்லை என்று கூறிவிடமுடியும்?"

"அது சரிதானடி! அவரை விரைவில் மணப்பதற்கான வழிவகை ஒன்றைக் கூறடி பார்ப்போம்!"

"நான் இனிமேல் களவொழுக்கம் நடத்தற்கு வரமாட்டேன் என்று அவரிடம் கூறிவிடு. பிறகு அவர் தாமே வழிக்கு வருகிறார்!"

"எப்படியடி நான் சொல்லுவேன்?"

"நான் உம்மோடு களவொழுக்கம் நடத்துவதால் ஊரில் பழிதூற்றல் கிளம்பிவிட்டது; அந்தப் பழிதூற்றல் அன்னை அறியும் அளவுக்கு வளர்ந்துவிட்டது; அதனை அன்னை அறிந்துவிட்டால், நான் களவொழுக்கம் நடத்துதல் முடியாமற் போகும்; பிறகு நான் வீட்டிலேயே அடைபட்டுப்போய்விடுவேன் என்றெல்லாம் அவரிடம் விளக்கமாக எடுத்துக்கூறு!" என்று தோழி தலைவன் காதிலும் விழுமாறு தலைவியிடம் அறிவுரை பகர்கிறாள்.

அதுகேட்ட தலைவி "அப்படி விளக்கம் கூறினால், அவர் என்னை மணந்துகொள்ள முன்வந்துவிடுவாரா?" என்று வினவுகிறாள்.

"உன்மீது அவருக்கு நல்லன்பு உண்டெனில், உனக்கு ஏற்பட்டுள்ள பழிச் சொல்லைத் தீர்க்கவேண்டியது அவர் கடனன்றோ! பழிச் சொல்லைத் தீர்க்கவேண்டுமானால், அவர் உன்னை விரைவில் மணந்துகொண்டுதானே தீரவேண்டும்! அப்படி உன்னை மணந்துகொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டு, மணந்துகொண்டு, உன்னை அவருடைய ஊருக்கு அழைத்துக்கொண்டு போவாரேயானால், உன்னைப் பற்றிப் பழி தூற்றுவோரெல்லாம் வாயடங்கி அப்படியே உட்கார்ந்துவிடுவார்களே!"

"நீ சொல்லுகிறபடி அவர் மணம் முடித்துக் கொண்டால், ஊரார் அலர் தூற்றுதலை உறுதியாக நிறுத்திக்கொள்வார்களல்லவா?"

"நிறுத்திக்கொள்ளாமல் வேறென்ன செய்வார்கள்? உன்னுடைய காதலருக்குச் சொந்தமான கடற்கரைப் பகுதியில், நீ அன்றாடம் காணும் காட்சியே அதற்கு உவமைபோல் நிற்குமே!"

"என்னடி அந்தக் காட்சி?"

"உப்பு வாணிகர்கள் உப்பு வண்டியை ஓட்டிக்கொண்டு செல்லும் காட்சியைத்தான் நீ பார்த்திருக்கிறாயே! உப்பு வாணிகர் வெள்ளை நிறங்கொண்ட கல்லுப்பை விலைகூறிக்கொண்டு, எருதுகள் பூட்டப்பட்ட வண்டியை ஓட்டிக்கொண்டு மணல் பாதை வழியே செல்லுவார்கள். வண்டியானது இதற்குமுன் வண்டிகள் போன மணல் சுவட்டின் வழியே போய்க்கொண்டிருக்கும். வண்டியின் உருளைகள் மணலில் பதிந்து செல்லும்போது, ஒருவித கரகரப்பு ஒலி ஏற்படும். அப்பொழுது, வயலிலுள்ள கருமையான காலையுடைய வெளிய நாரைகள் அந்த ஒலியைக் கேட்டு அஞ்சி நிற்கும். இந்தக் காட்சியைத்தான் நீ அடிக்கடி பார்த்திருக்கிறாயே! அதே நிலைமை உன்னைப்பொறுத்தும் ஏற்பட்டுவிடும்!"

"எனக்கொன்றும் புரியவில்லையேயடி! புரியுமாறு சொல்லடி!

"உப்புவண்டி மணல்வழியே ஏற்படுத்தும் ஓசையைக் கேட்டு வயலிலுள்ள நாரைகள் அஞ்சி ஒடுங்குவதைப்போல உன்னுடைய காதலர் உன்னை மணக்கவேண்டி, சான்றோர்கள் முன்னிலையில் உனக்கு அணிகலன்கள் தந்து, மணமுரசொலி ஒலிக்கும்போது, அந்த முரசொலி கேட்டு, அலர் தூற்றிக்கொண்டிருக்கும் முதுபெண்டிரும் வாயடங்கிப் போய்விடுவார்கள். பிறகு நீ எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. உன்பாடு கொண்டாட்டந்தான்!" என்று கூறுகிறாள் தோழி.

தலைவி சற்று மனத்தளர்ச்சியோடு, "அவர் என்னை விரைவாக மணக்க மனமிசையவேண்டுமே!" என்று ஏக்கத்தோடு கூறுகிறாள்.

தலைவி-தோழி ஆகியோரின் உரையாடலை நீண்டநேரம் செவிமடுத்துக்கொண்டிருந்த தலைவன், தலைவியின் துன்ப நிலையறிந்து, அத்துன்பத்தைத் துடைக்கவேண்டியது தன்னுடைய தலையாய கடமை என்பதை உணர்ந்து, திடீரென்று தலைவி முன்னிலையில் வந்து நிற்கிறான். தலைவி திடுக்கிட்டு எழுகிறாள்; தோழி புன்சிரிப்போடு எழுந்து ஒருபக்கம் நிற்கிறாள்.

"நான் உன்னை விரைவில் மணப்பேன். நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். வா போவோம்!" என்று தலைவன் தலைவிக்கு ஆறு

தல்கூறி அவளை அழைத்துக்கொண்டு போகிறான்!

ஃ ஃ ஃ

இது நற்றிணைப் பாடலொன்றின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்டக் காதலோவியமாகும். நற்றிணை சங்க காலத்து எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. அகத்துறை பற்றிய பாடல்களைக் கொண்டது. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய திணைகளின் ஒழுக்கமேம்பாடு குறித்துப் பல புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே நற்றிணை என்பது. நம்முன் நிற்கும் பாடலைப் பாடியவர் அம்மூவனார் என்ற அருந்தமிழ்ப் புலவராவார். இவர் பாடிய பாடல்கள் பல சங்க நூல்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன. தலைவியின் சங்கடமான நிலைமையைத் தலைவனுக்கு மறைமுகமாக உணர்த்தி, விரைவாகத் தலைவியைத் தலைவன் மணக்கவேண்டும் என்ற செய்தியைத் தோழி அறிவுறுத்துவது போலச் செய்யுள் புனைந்திருக்கும் மாட்சி படித்து இன்புறுதற்குரியதாகும். பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த செம்படவர், உப்பு வணிகர் ஆகியோர் எப்படி வாழ்வு நடத்தினர்கள் என்பதைச் சிறு குறிப்புகளால் நாம் அறிந்து கொள்ள இச்செய்யுள் பெரிதும் பயன்படுகிறது. இச்செய்யுளில் விளக்கப்பட்டுள்ள கடற்கரைக் காட்சிகள் இனிமை பயப்பனவாக விளங்குகின்றன. பண்டைத் தமிழகத்தில் ஆடவரும்—பெண்டிரும் மணம் முடிப்பதற்கு முன்பு களவொழுக்கத்தில் எவ்வளவு சிறந்து விளங்கினர்கள் என்பதை அறிந்துகொள்ள இச்செய்யுள் சீரிய எடுத்துக்காட்டாக இருக்கிறது.

ஃ ஃ ஃ

கானல்அம் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்
நீனிறப் புன்னைக் கொழுநிழல் அசைஇத்
தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி
அங்கண் அரில்வலை உணக்கும் துறைவனொ(டு)
அலரே, அன்னை அறியின் இவண்உறை வாழ்க்கை
அரிய ஆகும் நமக்(கு)எனக் கூறில்
கொண்டும் செல்வர்கொல் தோழி உமணர்
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்
கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்
மணல்மடுத்(து) உரறும் ஓசை கழனிக்
கருங்கால் வெண்குருகு வெரூஉம்
இருங்கழிச் சேர்ப்பில்தம் உறைவின் ஊர்க்கே.

[நற்றிணை]

[கானல் - கடற்கரையை அடுத்த சோலை; அம் - அழகிய; கடல்மேம் பரதவர் - கடல்மேல் செல்லஎண்ணும் செம்படவர்; நீனிற - நீலநிறத்தையுடைய; கொழுநிழல் - அடர்ந்த வளமான நிழல்; அசை இ - தங்கி: தண் - குளிர்ந்த; பதம் - கொந்தளிப்பு, காற்றுமாறியடித்தல் முதலியன இல்லாத சமயம்; அரில்வலை—முறுக்குண்கி வலை; உணக்கும் — உலர்த்தும்; துறைவன் - துறைக்கு உரிமையுடையவன்; இவண்உறை வாழ்க்கை - களவொழுகத்து வாழ்க்கை; உமணர் - உப்புவாணிகர்; கொள்ளை சாற்றி - விலை கூறி; கணநிரை - மிகவான எருதுகளின் கூட்டம்; நெடுநெறி - நீண்ட நெறி; சகடம் - வண்டி, மணல்மடுத்து-மணலில் படிந்து; உரறும் - முழங்கும்: கிளர்க்கும் — எழுப்பும்; வெண்குருகு - வெள்ளிய நாரை; வெரூஉம் - அஞ்சும்; இருங்கழிச் சேர்ப்பு — கரிய உப்பங்கழிகளைக்கொண்ட இருப்பிடம்; உறைவின் ஊர்-வாழும் ஊர்.]

அண்டசராசரம்-6

அக்கி ரோர் ஸ்கண் டைமின்

பிரகஸ்பதி

புதன் இருக்கும் உலகத்துக்கு இரண்டு கோடி மைல்களுக்குமேல் இருப்பது பிரகஸ்பதியின் உலகம். பிரகஸ்பதிக்கு மற்றொரு பெயர் வியாழபகவான் என்பதாகும்.

கல்வி, கேள்விகளிலும், தவவலிமையிலும், மேலுலகத்திலிருப்பவர்களில் மிகச் சிறந்து விளங்குபவர் பிரகஸ்பதி, அதனால் அவர் தேவர்களுக்கெல்லாம் குருவாக ஆனார். கொஞ்சம் புத்திசாலி என்று நினைத்துக்கொண்டிருப்பவனை "இவன் பெரிய பிரகஸ்பதி!" என்று கூறுவது, பிரகஸ்பதி பெரிய புத்திசாலி என்ற காரணத்தினால். தேவகுருவாக இருப்பதால், தேவர்களுக்கு யோசனை கூறுபவராக இருப்பதுடன், தேவேந்திரனின் சபையில் அவருக்கு முதலிடமும் தரப்படுகிறது.

பிரமனுடைய முகத்தில் ஆங்கிரசு என்பவர் உதயமானார். அந்த ஆங்கிரசு என்பவருக்கு சிராத்தா என்ற தேவமாதுவிடம் பிறந்தவர் பிரகஸ்பதி. இந்தக் கதைப்படி பிரகஸ்பதி பிரமனுடைய பேரனாகவேண்டும். இவர் தம் தவவலிமையால், தேவகுரு பதவியை அடைந்ததுடன், தாரை என்ற அழகிய பெண்ணையும் தாரமாகப் பெற்றார். உயர்ந்த பதவி, அழகிய மனைவி! தேவகுரு என்பதால் தேவர்களெல்லாம் அவருக்கு அடிபணிந்தனர்; இல்லத்தில் அடிபணிந்து இன்பந்தர, அடியாள் தாரை இருந்தாள். பிரகஸ்பதியின் வாழ்வு கவலையற்றதாக அமைந்திருக்கவேண்டும். ஆனால்....

தேவகுருவாக இருந்தமையால், பிரகஸ்பதியிடம் கல்வி பயில தேவகுமாரர்கள் பலர் வந்தனர். அந்தச் சிறுவர்களை ஏற்று, தேவகுரு அவர்களுக்குக் கல்வி போதித்து வந்தார். பாடம் கேட்கும் நேரம்போக, மற்ற நேரங்களில் குருவுக்குப் பணிவிடை செய்யவும், பர்ணசாலைக்கு வேண்டியவற்றைச்சேகரிக்கவும், யாகாதி காரியங்களைக் கவனிக்கவும், ஆகிய வேலைகளைத் தேவகுமாரர்கள் செய்துவந்தனர். குபேரனுடைய குமாரனும், இந்திரனுடைய மகனும், சூரியனின் புதல்வனும், வித்தியாதர, காந்தருவச் சிறுவர்களும் அங்கு குருகுலவாசத்தில் ஒன்றாக வாழ்ந்துவந்தனர். குருபத்தினி தாரை அவர்களையெல்லாம் தனது குமாரர்களைப்போலத் தாயன்புடன் வளர்த்துவந்தாள்.

நாளடைவில், பிரகஸ்பதியின் கண்காணிப்பில் தேவகுமாரர்கள் கல்வி கேள்விகளில் தேர்ச்சிபெற்றுவந்தனர். மாணவர்கள் அடையும் கல்வி வளர்ச்சி கண்டு குரு பூரிப்படைந்தார். ஆனால் மாணவர்களுக்கு, கல்வியறிவு வளர்ந்ததைவிட, வேகமாக வாலிபப் பருவமும், அந்தப் பருவத்திற்கேற்ற வசீகரமும் வளர்ந்துவந்தன. முன்போல அவர்கள் சிறுவர்களல்ல, இப்பொழுது அரும்பு மீசை துளிர்த்திடும் வாலிபர்கள். நிமிர்ந்த பார்வை, நேர்கொண்ட தோற்றம், வேகமான நடை, கணீர் என்ற குரல்—பர்ணசாலையைச் சுற்றித் தேவகுருவின் சீடகோடிகள் ஆடிப்பாடிக் கொண்டிருந்தனர். அந்த நேரங்களில் தேவகுரு ஓய்வெடுத்துக்கொண்டிருப்பார். ஓடி விளையாடும் மாணவர்களை மேற்பார்வையிட்டு, குருபத்தினி தாரை நிற்பாள். மான் விழி, மயிலின் நடை, குயிலின் குரல், குறுநகை தெரிக்கும் முகம்—தாரை அவர்கள் மத்தியில் நின்றுகொண்டிருந்தாள்.

குரு பிரகஸ்பதி கட்டளையிட்டால், உடனே மாணவர்கள் அதைச் செய்துவிடுவார்கள். ஆனால் குருபத்தினி தாரைக்கு வேண்டியவைகளை அவள் கட்டளையிடாமலே மாணவர்கள் செய்துவந்தனர். குரு செய்யும் யாகத்துக்குக் கிடைக்கும் விறகைவிட, அதிகமான அளவு விறகு குருபத்தினி மூட்டும் அடுப்புக்குப் பக்கத்தில் கிடந்தது. குருவுக்கு வேண்டிய தர்ப்பை எடுத்துவர இரண்டுபேர் சென்றால், தாரை வளர்த்துவரும் மான்குட்டிக்கு புல் அறுத்துவர ஐந்துபேர் சென்றார்கள். ஹோம தீர்த்தத்துக்குத் தண்ணீர் எடுத்துவரச் சென்

313

னால் மாணவனுக்கு சிற்றாறு தூரத்தில் இருக்கும், நீர்க்குடமும் கனமாக இருக்கும். ஆனால் குருபத்தினி கேட்டுவிட்டால் போதும், தூரம் குறுகிவிடும், கஷ்டமும் தெரியாது, நொடிப் பொழுதில் கொண்டுவந்துவிடுவான். குரு ஆகுதியைப் பெய்திட, ஒரு மாவிலை கேட்டால், நல்ல இலையாகப் பொறுக்கி, ஒன்றை வைத்து விட மாணவர்கள் தவறமாட்டார்கள். குரு பத்தினி "மாவிலை!" என்று சொல்லிவிட்டால், ஒரு மாமரத்தையே பெயர்த்துவந்து அங்கு வைத்துவிடுவார்கள்! இவைகளையெல்லாம் குரு அதிகமாகக் கவலைப்படும்படி எடுத்துக்கொள்வதில்லை. ஏதோ குருபக்தி, குரு குலத்தின் மாட்சி என்றுதான் அவர் எண்ணிக்கொண்டார். ஆனாலும் சில சமயங்களில், தாரை சீடர்களுக்காகப் பரிந்து பேசுவதும், அவர்களைப் பாராட்டிப் புகழ்வதும் குருவுக்குப் பிடிப்பதில்லை.

மாணவர்களில் முதன்மையாக இருந்தவன் சந்திரன். குரு ஏதாவது கேள்வி கேட்டால், சந்திரன்தான் எழுந்துநிற்பான். ஏதேனும் முக்கிய காரியம் செய்யவேண்டுமென்றால், "சந்திரா! சந்திரா!" என்றுதான் குரு கூப்பிடுவார். குருபத்தினி தாரையும், "சந்திரா! சந்திரா!" என்று கூப்பிடுவாள். இருவரும் ஒரே பெயரைத்தான் கூப்பிட்டார்கள். குருவின் குரலில் கடுமை, கட்டளையிடும் போக்கு இருந்தது. தாரையின் குரலில் ஒரு விதக் கனிவு, குழைவு இருந்தது. வேதங்களின் ரகஸ்யத்தை உணர்ந்தவர், ஆகமங்களின் அர்த்தத்தைப் புரிந்தவர், உபநிஷத்துக்களின் சாரத்தைக் கண்டவர், தேவர்களுக்குக் குருவாக இருப்பவருமான பிரகஸ்பதியால், "சந்திரா!" என்று தாரை அழைக்கும் குரலில் காணப்படும் கனிவின் ரகஸ்யத்தை, குழைவின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை!

ஒருசமயம் தேவேந்திரன் ஆரம்பித்த யாகத்தை நடத்தித்தர பிரகஸ்பதி தன் சிஷ்ய கோடிகளுடன் சென்றுவிட்டார், தாரையைப் பர்ணசாலையில் விட்டு, அவளுக்குத் துணையாக சந்திரனை வைத்துவிட்டு!

தனியே விடப்பட்ட தாரை, அவளருகில் இளமையும் அழகும் ஒளிவிடும் சந்திரன்—இருவருக்குமிடை நடந்த காதல்சம்பவம்—"தாரா சசாங்கம்" கதை பலருக்குத் தெரிந்தது. எனவே அதைப்பற்றிக் கூறத்தேவையில்லை.

மாதேவனுக்கு நடத்திய யாகத்தை வெற்றிகரமாக முடித்து, குரு திரும்பிவந்தார். இங்கு பஞ்சணையை யாகமேடையாக்கி காதல் தீயை மூட்டி, கனிமொழிகளை வேதகோஷங்களாக உச்சரித்து, மாரனுக்குப் பிரியமான வேள்வியை குருபத்தினி தாரை செய்துகொண்டிருந்தாள். பிரிய பத்தினியும், பிரதம சீடனும் செய்த விபரீதம் கண்டு, குரு துடிதுடித்தார், அலறினார், கதறினார், கடைசியில் தேவர்கள் அவரிடம் வந்து "எல்லாம் தெய்வசங்கல்பத்தால் நடந்தது. இங்கு இந்தப் புனிதமான சம்பவம் நிகழ வேண்டுமென்றுதான், தேவேந்திரனின் யாகத்துக்கு உங்களை அழைத்துக்கொண்டு போனது. அதனால் பதறாதீர்! கதறாதீர்! பகவத் பிரீதி என்று தள்ளிவிடும்!" என்று ஆறுதல் சொன்னார்களாம். தெய்வ சம்மதமான காரியம் என்றதும், வேறு சொல்வது தெரியாது, தேவகுரு பள்ளிக்கூடத்தைக் கலைத்து, முதலில் பையன்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, பத்தினி தாரையை அழைத்துக்கொண்டு மற்றொரு காட்டுக்குப் போய்விட்டார். அங்கு, தாரையிடம் பிறந்த குழந்தையை புதன் என்று பெயரிட்டு, வளர்த்துவந்தார். வெகுநாட்கள் வரை புதன் தன் மகன்தான் என்று நினைத்து வந்தார். பின் பிரமதேவன் சொல்லித்தான், புதன் சந்திரனுடைய குமாரன் என்பது பிரகஸ்பதிக்கு—தேவர்களின் குருவுக்கு முக்காலமும் உணர்ந்த முனிபுங்கவருக்குத் தெரிந்ததாம்.

சந்திரனுடைய புராணக் கதையைப் பார்த்தால், சந்திரன் பிரமதேவனின் பேரனாகும். பிரகஸ்பதியும் பிரமதேவனின் பேரர்களில் ஒருவர். இதன்படி பிரகஸ்பதிக்கு சந்திரன் தம்பி முறையாகவேண்டும். அண்ணனின் மனைவியைக் கைப்பிடித்த மாபாதகத்தைச் சந்திரன் செய்திருக்கிறான். தம்பி இப்படி என்றால், புராணக் கதைகளை இன்னும் படித்தால், பிரகஸ்பதி இன்னும் அக்கிரமமான மாபாதகங்களைச் செய்திருக்கிறார்.

பிரகஸ்பதிக்கு உதத்தியன் என்று ஒரு தம்பி இருந்தான். உதத்தியன் மனைவி மமதை என்பவள் அழகு வாய்ந்தவள். ஒரு நாள் பிரகஸ்பதி உதத்தியனைக் காணச் சென்றிருந்தார். தம்பியைக் காணவில்லை. மமதை மட்டும் இல்லத்தில் தனித்திருந்தாள். அப்பொழுது அவள் கர்ப்பவதி. தம்பி வீட்டிலில்லையென்

314

றதும், பிரகஸ்பதி உடனே திரும்பிவிடவேண்டும். பிரகஸ்பதியோ, தம்பி யில்லையென்றதும், அங்கேயே உட்கார்ந்து, தம்பி மனைவியைக் கூப்பிட்டுப் பேச்சுக்கொடுத்தார். அவருடைய பேச்சில், பெரியவர்களுக்கு இருக்கவேண்டிய பெருந்தன்மையோ, யோசனையோ இல்லை. வரவரப் பேச்சிலே இழுப்பும், பார்வையிலே காமமும் தெளிந்தன. மமதை திடுக்கிட்டாள், திகைத்தாள், பிரகஸ்பதியா இப்படிப் பேசுகிறார் என்று! அவர் தவத்தில் மிக்கவர், கல்வி கேள்விகளில் சிறந்தவர், தேவர்களுக்கெல்லாம் குரு, தனது கணவனின் அண்ணன்! அழகிய பெண்களை அவர் காணாதவரல்ல, இல்லத்திலே தர்மபத்தினியாக அழகு சுந்தரி தாரை இருக்கிறாள்! அவரா இப்படி மோகங்கொண்டு, தகாத வார்த்தைகளைப் பேசுகிறார் என்று மமதை மலைத்தாள்! அதிலும் அந்த தயாபரர் யாரிடம் காமப்பேச்சுகளை வீசுகிறார், தம்பி மனைவியிடம், வயிறு சுமந்த கர்ப்பவதியாகயிருப்பவளிடம்! தீதுமொழிகளைக் கேட்டு, செவியகத்தைப் புதைத்தவண்ணம் கண்கலங்கி நின்றாள் மமதை! தம்பியின் மனைவி, கர்ப்பவதி, கலங்கிநிற்கிறாள், நிற்கக்கூடச் செயலற்று! சே! காமுகன், கசடன்கூட விலகிச் சென்றிருப்பான்! ஆனால் தவசிரேஷ்டர், தேவகுரு, பிரகஸ்பதி முன்வைத்த காலை பின்வைக்காத சுத்த வீரராக அங்கு காட்சியளித்தார்! "சோமரசமே! சொர்ணப் பிம்பமே! பாற்கடல் அமுதினும் பவ்வியமானவளே! காமக்கடலின் அமுதை கண்டெடுப்போம் வாராய்!" என்று பிரகஸ்பதி மமதையின் கையைப் பிடித்து இழுத்தார். மமதை கையை உதறினாள், கதறினாள், கண்ணீர்விட்டாள், கெஞ்சினாள், தஞ்சமென்று கூவினாள், அரியையும் சிவனையும் அழைத்தாள், அபயமென்று அலறினாள். அவளுடைய கூக்குரல்கள் வேறு யார் காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

போராடமுடியாமல், கர்ப்பவதி நிலைகுலைந்து விழுந்தாள், தேவகுரு தன் காமவெறிக்கு அவளைப் பலி கொண்டார்.

புராணக்கதை இந்த ஆபாசச் சம்பவத்தை மிகுந்த ரசனையுடன் வர்ணித்திருக்கிறது. ஆசாபாசங்களைப் போக்கி, ஆண்டவனின் அருளைப் பெறும் வழியைக் காட்டுவதற்குப் புராணங்கள் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் படித்ததும், களங்கமற்றவனையும் காமுகனுக்கு மளவுக்குத் தூண்டும் காமக்கதைகள் அதில் நிறைந்திருக்கின்றன. காமக்கதைகளைச் சொல்லும்பொழுது புராணக்காரர்களின் கற்பனை ஆபாசத்திற்கு எல்லையென்பதே இல்லாமற் வளர்ந்துவிடுகிறது. உதாரணமாக, மேலே குறிப்பிட்ட பிரகஸ்பதி தம்பி மனைவி மமதையைக் கற்பழித்த கதையில், புராணம் எவ்வளவு காமரசனையையும், அருவருப்பான கற்பனையையும் தருகின்றன தெரியுமா! தேவகுரு கர்ப்பவதியான மமதையைக் கற்பழித்தபொழுது, அவளுடைய கருவிலிருந்த சிசு இடையூறாக இருந்து தடைசெய்ததாம். உடனே தேவகுரு கோபங்கொண்டு, சிசுவைக் குருடனாகும்படிச் சபித்தாராம். கருப்பையிலிருந்த குழந்தை குருடனாகி, எதையும் காணாது தவித்ததாம். அதை ஒருபக்கத்தில் ஒதுக்கிவிட்டுக், கருப்பையில் மற்றொரு பக்கத்தில் தமக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்கு தேவகுரு இடமொழித்துக்கொண்டாராம். புராணக்கதை இதை இன்னும் விவரமாக அச்சமெதுவுமின்றிப் பச்சைப் பச்சையாக எடுத்துக்கூறுகிறது. கர்ப்பவதியைக் கற்பழித்து, தேவகுரு அவளிடம் பெற்றெடுத்த குழந்தையே பரத்துவாசன் என்ற முனிவராகும்.

தேவர்களுக்குக் குருவாக இருக்கக்கூடிய பிரகஸ்பதியின் கதையே இப்படியிருந்தால், அவருடைய மாணவர்களாகிய தேவர்களின் கதையைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. தேவகுருவின் காமக்கதையைப் பார்க்கும்பொழுது, இந்திரன் அகல்யாவைத் தேடிச்சென்றதும், ஊர்வசி, ரம்பைகள் கண்டவர்களைக் கையைப்பிடித்திழுத்ததும், தேவகுமாரர்கள் லீலாவினோதங்கள் புரிந்ததும் சாதாரணமாகப்படுகின்றன. தம்பி மனைவி மமதையைத், தனது காமவெறிக்குப் பலியாக்கினார் பிரகஸ்பதி; அதற்குத் தண்டனை தருவதுபோல அவருடைய மனைவி தாரையை அவருக்குத் தம்பிமுறை வேண்டும்—சந்திரன் கைப்பற்றினான். இந்திரன் கெட்டதற்கும், சந்திரன் கெட்டதற்கும் ஒருவகையில் அவர்களால் சமாதானம் கூறமுடிகிறது. இந்திரன் என்று தெரிந்ததும் அகல்யை ஆவலுடன் நேசித்தாள் என்று புராணம் கூறுகிறது. தாரை வலியச் சென்று சந்திரனை அழைத்துக்கொண்டதாகக் கதை விவரிக்கிறது. ஆனால் அவர்களுக்கெல்லாம் குருவான பிரகஸ்பதி, மறுத்தவளை—கண்கலங்கி நின்றவளை—கதறியழுதவளை—கர்ப்ப

வதியாக இருந்தவளைக் கருவிலிருக்கும் சிசுவையும் தண்டித்துவிட்டுக், காமவேட்டையாடியிருக்கிறார். அத்தகைய மகானுபவர் தவசிரேஷ்டராம், தேவகுருவாம், முனிபுங்கவராம், முற்றுந் தெரிந்தவராம். அவர் செய்த அரிய சாதனைகளுக்குப் பரிசாகப், பிரமதேவன் தான் படைத்த பிரமாண்டத்தில் ஒரு உலகத்தை ஒதுக்கித்தந்து, அதற்கு அவரைத் தலைமையாக்கினான்.

பிரகஸ்பதி பொன்மயமான தேக காந்தியை உடையவராம். அவரது உலகும் பொன்னால் ஆனதாம். எட்டுக் குதிரைகள் பூண்ட பொன் தேரில் ஏறிப், பிரகஸ்பதி பவனி வருகிறாராம். அவருடைய உலகின் உயரம் இரண்டுகோடி மைல், புராண அளப்புப்படி!

சுக்கிரன்

பிரகஸ்பதியின் உலகத்துக்கு மேலேயிருப்பது சுக்கிரனுடைய உலகம். பிரகஸ்பதி தேவர்களுக்குக் குருவென்றால், சுக்கிரன் அசுரர்களுக்குக் குருவாக இருக்கிறான். எனவே பிரகஸ்பதிக்கும், சுக்கிரனுக்கும் எப்பொழுதும் தீராத பகையும், விரோதமும் உண்டு.

பிரகஸ்பதியைப்போலவே, சுக்கிரனும் பிரமாவின் பேரர்களில் ஒருவன். பிரமாவின் புத்திரர் பிருகு என்பவர், அந்தப் பிருகுவின் மகன், சுக்கிரன். இந்தவகையில் அவன் பிரமாவின் பேரனாயினான். கடுமையான தவமியற்றி அந்தத் தவவலிமையால் கிரகபதமும், அசுரர்களுக்குக் குருவாகவும் ஆனான்.

சுக்கிரன் என்ற பெயர் ஏற்பட்டதற்குக் காசிகாண்டம் என்ற புராணத்தில் வேடிக்கையான கதையொன்றிருக்கிறது. சுக்கிரனுக்கு முதலில் பார்க்கவன் என்ற பெயரிருந்தது. அவன் தனக்கிருந்த வலிமையைப் பற்றித் தற்புகழ்ச்சிகொண்டு, குபேரனை ஏளனமாகப் பேசி விரட்டியடித்தான். அவமானப்பட்ட குபேரன்—தேவர்களில் மிகவும் செல்வந்தன், ஐஸ்வரியங்களுக்கு அதிபதியாக இருப்பவன், அவன் சிவபெருமானிடம் போய் முறையிட்டுக் கொண்டான். காசு பணம் படைத்தவன் முறையிட்டுக்கொண்டால் தற்காலத்தில் அரசாங்கம் உடனே அக்கரை காட்டுவதுபோல, குபேரன் முறையிட்டதும் சிவபெருமான் அந்த வழக்கை ஏற்றுக்கொண்டு பார்க்கவனை அழைத்தார். பார்க்கவன் வந்து எதிரே நின்றான். சிவபெருமான் எதுவும் கேட்கவில்லை, பேசவில்லை. பார்க்கவனைப் பார்த்ததுதான் தாமதம். உடனே உருட்டிவைத்த வெண்ணெயை எடுத்து விழுங்குவதுபோல, பார்க்கவனை எடுத்து வாயில் போட்டுச் சிவபெருமான் விழுங்கிவிட்டார்! வேடிக்கையான சம்பவம், குற்றஞ்சாட்டப்பட்டவனை அப்படியே எடுத்து விழுங்கிவிடுதல்! அதிலேயே கேள்வி, குற்றம், தீர்ப்பு, தண்டனை எல்லாம் அடங்கிவிட்டன! மகாதேவன் ஆள்விழுங்கி மகாதேவனாக ஆகிவிட்டார்!

பிருகுமுனிவரின் புத்திரனைச் சிவபிரான் எடுத்து விழுங்கிவிட்ட திடீர்ச்செய்தி தேவலோகம்முழுவதும் பரவியது. தங்கள் குருவைச் சிவன் எடுத்து விழுங்கிவிட்ட செய்தி அசுரர்களுக்கும் தெரிந்தது. தேவாசுரர்கள் ஒன்றுகூடி, மலையிலிருக்கும் ஆள்விழுங்கி மகாதேவனின் முன் நின்று, சுக்கிரனைத் திருப்பித் தருமாறு முறையிட்டனர். அவர்களது முறையீட்டை ஏற்றுக்கொண்டு, பார்க்கவன் தன் வயிற்றில் அடங்கியிருக்கிறானென்றும் அவனைத் திரும்பத் தருவதாகவும் வாக்களித்து, அவர்களையெல்லாம் போகச்செய்து, தனது அருமைப் பிராட்டி பார்வதிதேவியைத் தனியே அழைத்துச்சென்று காமக்களியாட்டத்தில் ஈடுபட்டார். அப்பொழுது விழுங்கப்பட்ட பார்க்கவன் வெளிப்பட்டான். சுக்கிலம் போலும் வெண்மையான நிறத்தை அடைந்ததால், பார்க்கவன் அதிலிருந்து சுக்கிரன் என்று பெயர்பெற்றான். சுக்கிரன் என்ற பெயருக்கும் அவன் அடைந்துள்ள வெண்மையான நிறத்துக்கும் காரணம் கூறும் இந்த ஆபாசக்கதை காசிகாண்டம் புராணத்திலிருக்கிறது.

சுக்கிரன் அசுரர்களுக்குக் குருவாதலால், அசுரர்களைப் பாதுகாப்பதில் கண்ணுங் கருத்துமாயிருப்பவன். ஒருசமயம் மாபலி என்ற அசுரர் தலைவன், தனது வலிமையால் உலக முழுவதும் தன் ஆணைக்குள் அடக்கி, தேவர்களைப் பயமுறுத்தினானாம். எதிர்த்து நிற்பதற்கு வகையற்ற தேவர்கள், வழக்கம்போல், பாற்கடலில் உறங்கும் திருமாலிடம் மனுச் செய்து கொண்டனர். திருமால் மிகக் குள்ளமான உருவத்தையுடைய வாமனன் என்ற பிராமணனாக அவதாரஞ்செய்து மாபலியிடம் சென்று, தன் காலால் மூன்றடி மண் வேண்டும் என்று

யாசித்தாராம். தானந் தருவதாக ஒப்புக் கொண்டு, அதைத் தருவதற்கு அடையாள மாக, கமண்டல நீரை வார்த்துத்தரப் போனு னும். திருமால் மாய உருக்கொண்டு வந்து, மாபலியை ஏமாற்ற நினைத்திருப்பதை அறிந்த சுக்கிரன் உடனே ஒரு சிறு வண்டுபோல உரு வத்தைக் குறைத்து, கமண்டலத்துக்குள் புகுந்து, நீர் வழியவேண்டிய வாயை அடைத்து விட்டார். நீர் தெளிக்காவிட்டால், தானம் தந்ததாக அர்த்தமாகாது. கமண்டலம் அடைக் கப்பட்டிருப்பதற்கான காரணத்தைத் தெரிந்து கொண்ட திருமால், உடனே ஒரு தர்ப்பையை மடக்கி, துவாரத்தைக் குடைந்துவிட்டாராம். அடைத்துக்கொண்டிருந்த சுக்கிரனின் கண் ணில் குத்தி, ஒரு கண் கெட்டுவிட்டது. பின் சுக்கிரன் வெளியே வந்துவிட, தண்ணீர் வழிந்து, திருமால் மூன்றடி நிலத்தைத் தான மாகப் பெற்று பின் விசுவரூபமாக வளர்ந்து, விண்ணையும் மண்ணையும் அளந்து, மூன்ருவது அடியால் மாபலியை மிதித்து, பாதாளத்தில் அழுத்திவிட்டாராம். மாபலி அப்படி அழிக் கப்பட்டான் என்பதற்கும், சுக்கிரனுக்கு எப் படி ஒரு கண் கெட்டது என்பதற்கும் இந்தக் கதையைப் புராணக்காரர் கூறுகிருரேயன்றி, திருமாலின் மோசடித் தன்மையும், அந்த மோசடித்தன்மையைத் தடுக்க வந்து, துன் பத்தை ஏற்கத் துணிந்த—ஒரு கண்ணை இழந்த, சுக்கிரனின் பெருமையும் ஒருவாறு வெளிப்படுவதை புராணக்காரர் யோசிக்க வில்லை. திருமால் மோசடி செய்தார், மோசடி யைத் தடுக்க முன்வந்த சுக்கிரன் கண்ணை யிழந்தான். இதில் யாரைப் பெருமைப்படுத் துவது? எது எப்படியோயாக, சுக்கிரனுக்கு ஒரு கண் குருடாயிற்று, இந்தக் கதைப்படி.

அசுரர்களுக்குக் குருவாகச் சுக்கிரனும், தேவர் களுக்குக் குருவாகப் பிரகஸ்பதியும் இருக்கிருர் கள். இருவரும் எப்பொழுதும் ஒருவரையொரு வர் எதிர்த்துச் சதி செய்தபடியே இருக்க வேண்டும். அண்டங்களைப் படைத்த பிரம தேவன் இருவரையும் பக்கத்திலேயே வைத்து விட்டார். பிரகஸ்பதியின் உலகத்துக்கு அடுத்து மேலே சுக்கிரனுடைய உலகமும் ஆரம்பித்துவிடுகிறது.

சுக்கிரன் பத்து குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி, பவனி வருகிருனும். சுக்கிரனுடைய உலகத்தின் உயரம் இரண்டுகோடி மைல் புரா ணக்காரர்களின் "அளப்புப்படி".

சனி

கிரகங்களுள் மிகப் பொல்லாதது சனி என்று சோதிடர்கள் கூறுவார்கள். சனி பிடித்தால் போதும், அவன் அரசனுயிருந்தா லும் ஆண்டிக்கோலத்துக்கு ஆளாகிவிடுவான்.

சனி சூரியனுடைய குமாரர்களில் ஒருவன். சூரியன் சஞ்ஞிகை என்ற பெண்ணை மணந்து கொண்டானும். புது மனைவிக்குக் கணவனைப் பார்த்ததும் பயம் வந்துவிட்டதாம், இவ்வளவு கொடிய வெப்பத்தையுடையவரை எப்படி அணைத்து, மகிழமுடியுமென்று. எனவே மணவறையில், தன்னைப்போல் சாயலுள்ள பெண்ணை வைத்துவிட்டு, சஞ்ஞிகை ஓடிவிட் டாளாம். மணவறைக்குள் குதூகலத்துடன் நுழைந்த சூரியன் ஆள் மாறாட்டத்தைக் கண்டுகொள்ளவில்லை. அவனுக்கிருந்த காம நினைவில், அங்கு இருந்த பெண்ணை தன் மனைவியாக்கிக்கொண்டான். சூரியனுக்கு அந்தப் பெண்ணிடம் பிறந்தவர்களில் ஒருவன் சனி.

சனி தன் தவ வலிமையால் கிரகபதமடைந் தவனும். சுக்கிரனைப்போல, இவனுக்கும் ஒரு கண் குருடு. அதுமட்டுமல்ல ஒரு கால் முட முங்கூட. இவனுடைய வாகனம் காக்கை. இவனுடைய தேரில் எட்டுக் குதிரைகள் பூட் டப்பட்டிருக்கிறதாம். மந்த நடையும், குரோத புத்தியும் உடையவன். கிரகங்களின் பெயர் வரிசையில், சனியைக் குறிப்பிடும்பொழுது, மந்தன், பிணிமுகன், சவுரி, முதுமகன், முட வன் என்று வேறு பெயர்களும் வழங்கப்படு கின்றன.

சனி பகவானின் உலகம், இரண்டுகோடி மைல் உயரமுள்ளது, புராணக்காரரின் "அளப்புப்படி".

(தொடரும்)

'மன்றம்' சந்தா விபரம்

		உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்		6—0—0	7— 8—0
ஆறு திங்கள்	,,	3—0—0	
தனி இதழ்	,,	0—4—0	0— 5—0

தொடர் கதை

317

4

[இரா. செழியன்]

"உன் பெயரென்ன ?" என்று டாக்டர் தங்கம் கேட்டாள்.

எதிரேயிருந்த நோயாளி பேசாமல் உட்கார்ந்திருந்தாள். சிறிதுநேரம் பேசாமலிருந்து பின் "சகுந்தலா!" என்று மொழிந்தாள். தங்கம் அதைக் குறித்துக்கொண்டாள்.

"உன் கணவனின் பெயரென்ன ?" என்று தங்கம் மீண்டும் கேட்டாள். நோயாளி முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள். கணவனின் பெயரைக்கேட்டால், அங்கு வருகிற பெண்களில் பெரும்பாலோர் சொல்வதில்லை. உடன் வந்திருப்பவர் யாராவது முன்வந்து "கோவிந்தசாமி" "கிருஷ்ணசாமி" என்று சொல்லியாகவேண்டும். தங்கத்திற்கு இந்தப் பழக்கம் நன்ருகத் தெரியும். ஆனல் எதிரே உட்கார்ந்திருக்கும் பெண் அத்தகைய கூச்சத்தால் சொல்லாமலிருப்பதாகத் தெரியவில்லை. கணவனின் பெயரைக் கேட்டதும் அவள் முகத்தில் கலக்கம் தோன்றியது, கன்னங்களில் கண்ணீர் வழிந்தது, மிகுந்த வேதனையால் அவள் தாக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்தது.

"உன்னுடைய புருசன் பெயரென்ன டாக்டர் கேட்பதற்குச் சொல்!" என்று நர்ஸ் ஊட்டினாள். அதற்குப் பதிலாகத் தலையை மட்டும் அசைத்தாள்.

"இல்லையா ?" நர்ஸ் கேட்டாள்.

"செத்துவிட்டார்!"

"நீ இப்பொழுது யாருடைய ஆதரவில் இருக்கிருய். அப்பா, அம்மா, அல்லது உறவினர்களில் முக்கியமானவர்களின் பெயர், விலாசம்..." சீக்கிரமாக அந்தத் தாளை எழுதி முடித்துவிடத் தங்கம் முயன்ருள்.

"அப்பா, அருணாசலப்பிள்ளை 13, அனுமார் கோவில்தெரு, ஆலததூர்".

மேற்கொண்டு எழுதவேண்டிய விவரங்களை, டாக்டர் தங்கம் எழுதி முடித்தாள்.

ஒரு தள்ளுவண்டியுடன் வேலைக்காரன் வந்து காத்துக்கொண்டிருந்தான். "இந்த அம்மாவைப் பிரசவ விடுதிக்குக்கொண்டுபோ!" என்று நர்ஸ் அந்த நோயாளியை அனுப்பி வைத்தாள்.

தங்கம் கையைக் கழுவித் துடைத்துக்கொண்டு திரும்பினாள். டாக்டர் சாந்தா அப்பொழுதுதான் உள் நுழைந்தாள்.

"எங்கே போய்விட்டாய் சாந்தா !"

"நான் பக்கத்தில் ஆர்பனேஜுக்குப் போயிருந்தேன். ஒரு பையன் கீழே விழுந்து காலில் காயப்படுத்திக்கொண்டான். அப்பப்பா! போதும் இந்த அனுதைச் சிறுவர்களை வளர்ப்பதற்குள். அவர்களுக்கேத் தனியாக ஒரு ஆஸ்பத்திரி கட்டவேண்டும்."

"பாவம்! அனுதைகளாக இருப்பவர்கள்-பையனுக்குக் காயம் பலமானதா ?" என்று தங்கம் கேட்டாள்.

"இல்லை! லேசான கீரல். ஆனல் இரத்தத்தைப்பார்த்ததும் பையன் அழ ஆரம்பித்துவிட்டான்."

"நீ போயிருந்தபொழுது, ஒரு அவசர கேஸ் வந்தது. மூர்ச்சைபோட்ட பெண்—இரத்த சோகை—கர்ப்பம்—"

318

"அவள் எங்கே?"

"பார்த்து, அவளைப் பிரசவவிடுதிக்கு அனுப்பி விட்டேன்."

"நன்றி!"

"நான் போகிறேன்" என்று தங்கம் அந்த இடத்தைவிட்டுக் கிளம்பினாள்.

நான்குமணி அடிப்பதற்கு—எப்பொழுதும் வருவதற்கு அரைமணி நேரத்துக்குமுன்னதாகவே டிரைவர் கண்ணுசாமி தங்கத்தின் முன் வந்து நின்றான்.

"ஏன் இவ்வளவு சீக்கிரம்?"

"ஐயாவும் கீழே வந்திருக்கிறார்!"

வழக்கமாக கமலநாதன் வருவதில்லை. காரை ஓட்டிக்கொண்டு தங்கம் வந்துவிடுவாள். உடன் வருகிற டிரைவர் கண்ணுசாமி, காரை திரும்ப எடுத்துக்கொண்டுபோய்விடுவான். மாலையில் அதேபோல் காரைக் கொண்டுவருவான். தங்கம் வீட்டிற்குப் போனதும், கார் கமலநாதனுக்குப் போய்விடும். சில சமயங்களில் கோர்ட்டிலிருந்து சீக்கிரமாகவே வந்து தங்கத்திற்காக வீட்டில் காத்திருப்பான். ஆனால் இன்று ஆஸ்பத்திரிக்கே அவர் வந்திருப்பது, தங்கத்திற்குச் சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

தனது வேலையை ஒழுங்குபடுத்திவிட்டு, தங்கம் கீழே இறங்கிவந்தாள். அவர்களுடைய காரைக் காணோம். அதைத் தேடி சுற்றிலும் பார்த்தபடி தங்கம் நின்றாள். மரத்தடியில் நிறுத்தப்பட்டிருந்த புதிய கார் ஒன்று புறப்பட்டு வந்தது. முன்னால் ஓட்டிவந்த கமலநாதன், காரை நிறுத்தி, தங்கத்தை அமரச் செய்தான்.

"யாருடைய கார்?"

"டாக்டருடையது."

"யாரது? புதிய காராக இருக்கிறது."

"நன்றாக இருக்கிறதா?"

"ஆமாம்! புதிய காரை வாங்கி உங்களிடம் முதலில் யார் இரவலாகக் கொடுத்தது."

"அதுதான் முதலில் சொன்னேனே! டாக்டர் ஒருவருடையது."

"யாருடையது? டாக்டர் சங்கரனுடையதா? ஆனால் அவரிடம் பெரிய கார் ஒன்று இருக்கிறது...."

"அவளைப் பற்றி...."

"அவள்? ஆகா! டாக்டர் சுந்தரியினுடைய அண்ணன் வாங்கிய காரா?"

"ஊம்...ஒரு லேடி டாக்டருடைய கார் தான்...."

"யார் அந்த ஏமாளி? உங்களை நம்பி, புதிய காரை கொடுத்தது...."

"ஏன், என்னை நம்பக்கூடாதா? தங்கம் உனக்கு ஒரு புதிய கார் வந்தால், என்னை நம்பிக் கொடுக்கமாட்டாயா?"

"காரைத் திருடிக்கொண்டு ஓடிவிட்டால்...."

"கார் மட்டுமா, காரைத் திருடிக்கொண்டு மட்டுமா, அதன் சொந்தக்காரியையும் திருடிக்கொண்டு ஓடிவிடுவேன்."

"போதும்; நான் ஒன்றும் கேட்கவில்லை."

"அதைப்பற்றி ஒன்றும் கவலைப்படமாட்டாய்."

சரிந்த வளைவு ஒன்று வந்தது. வேகத்தை மட்டுப்படுத்திக், காரைத் திருப்பிக்கொண்டு, கமலநாதன் மீண்டும் பேச்சுக்கொடுத்தான். அவர்கள் பேசிக்கொண்டது பாதிக்குமேல் ஆங்கிலத்தில் இருந்ததால், பின்னால் உட்கார்ந்திருந்த டிரைவருக்கு இவர்களுடைய பேச்சு புரியவில்லை.

"அப்பா! எப்படிக்கோபம் வந்துவிடுகிறது! கார் யாருடையது தெரியுமா டாக்டர்...."

"நான் ஒன்றும் கேட்கவில்லை என்று சொன்னேனே!"

"நீ கேட்காவிட்டால், நானாகச் சொல்கிறேன். டாக்டர் தங்கம் அவர்களுடையது."

"என்னுடையதா?"

"ஆமாம்! உனக்காக வாங்கப்பட்டதுதான்."

"உண்மையாகவா?"

"உண்மையை, முழு உண்மையை, உண்மையைத்தவிர வேறெதையும்தான் நான் சொல்லவில்லையே!"

தங்கத்திற்குத் தனியாக ஒரு கார் வாங்க வேண்டுமென்று கமலநாதன் நீண்டநாட்களாக நினைத்திருந்தான். அதைப்பற்றி அவளிடம் முன் கூட்டிச் சொல்லாமல் திடீரென்று கொண்டுவந்து, அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தினான்.

“இப்பொழுது திருடிச்செல்வதற்குத் தடையேதும் கிடையாதே!”

கமலநாதன் சொன்னதற்குப் பதில் எதுவும் சொல்லாமல், கருநீல வண்ணத்துடன் முன் பகுதி மின்னிட கார் செல்வதையே தங்கம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

எதிர்பாராத வகையில் வந்த கார் அவளுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. வீட்டை யடைந்ததும், மற்றொரு ஆச்சரியம் அவளுக்குக் காத்துக்கொண்டிருந்தது. பொன்னம்மாள் வந்து, யாரோ ஒருவர் அவருக்காகக் காத்திருப்பதாகச் சொன்னாள்.

ஹாலுக்குள் நுழைந்தபொழுது, அங்கு உட்கார்ந்திருந்த ஒருவர்—வயது இருபத்தாறு அல்லது இருபத்தேழுக்கு மேலிராது—எழுந்து தங்கத்திற்கு வணக்கஞ் செலுத்தினார். அவரைத் தங்கம் அதற்குமுன் பார்த்ததில்லை.

“நீங்கள்....” என்று தயங்கிக்கொண்டு தங்கம் பேச்சை ஆரம்பித்தாள்.

“டாக்டர் தங்கத்தை....”

“நான்தான் டாக்டர் தங்கம்.”

“எனக்குத் தெரிகிறது!” என்று புதிதாக வந்தவர் சற்று சிரித்துக்கொண்டார். “தங்கம், என்னை உனக்குத் தெரியவில்லை—உம்! நானே அறிமுகம் செய்துகொள்கிறேன். குலசேகரன்!”

“ஆ! சேகரா? அதுதான் முகம் பார்த்ததுபோலிருந்தது!”

“எல்லாம் பொய்! உனக்குத் துளிகூட ஞாபகமில்லை.”

குற்றச்சாட்டைத் தங்கத்தால் மறுக்கமுடியவில்லை. காலங் கடந்துவிடுகிறது, நினைவு மங்கிவிடுகிறது, புதிய படங்கள் பழைய படங்களை அப்புறப்படுத்துகின்றன. ஓ! காலம் எவ்வளவு கொடுமையானது. ஆனால் குலசேகரனைப் பார்த்து, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. அவனைப்பற்றி ஞாபகம் இல்லையென்று கூறமுடியாது. அவளுடைய மனதில், குலசேகரன் இன்னும் ஒரு பள்ளிச் சிறுவனாகவே காட்சியளித்தான். இப்பொழுது அடையாளந் தெரியாதபடி மாறிவிட்டான்.

“சேகர்! இப்பொழுது கோயம்புத்தூரில் தானே இருக்கிறாய்?”

“இல்லை, சென்னைக்கு வந்து ஒருவாரமாகிறது. இனி இங்கேயே தங்கிவிடப்போகிறேன்.”

“ரொம்ப நல்லது. அத்தை அஞ்சலை எங்கேயிருக்கிறார்கள்?”

“என்னுடன்தான் இருக்கிறாள்.”

“ஏன் அழைத்துவரவில்லை?”

“நானே வீடுதேடி, உன்னைக் கண்டுபிடித்தேன். அப்படிக் கண்டுபிடித்த பின்னும், ‘நீங்கள் யார்?’ என்று நீ கேட்டுவிட்டாய்.”

“ஓ! மன்னித்துவிடு! நீ வந்திருப்பதாகச் சொன்னால், நானேகூட வந்து பார்த்திருப்பேன்.”

கோட்டைக் கழற்றிக்கொண்டு, கமலநாதன் உள் நுழைந்தான். தங்கம் அவர்களிருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திவைத்தாள். பின் உடைகளை மாற்றிக்கொள்ள கமலநாதன் மேலே சென்றுவிட்டான். தங்கமும் குலசேகரனும், பள்ளிக்கூட நாட்களைப்பற்றி, நண்பர்கள் ஆசிரியர்களைப்பற்றி, வீட்டைப் பற்றி, அத்தையைப்பற்றிப், பேசிக்கொண்டிருந்தார்கள். கமலநாதன் திரும்பவும் வந்தபொழுது, அவர்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றே புரியவில்லை.

பேசிக்கொண்டே வரும்பொழுது “நீ டாக்டர் வேலைக்குப் படிப்பாய் என்று நினைக்கவில்லை. வாத்தியார் வேலைக்குப் போய்விடுவாய் என்று நான் நினைத்தேன்” என்று குலசேகரன் சொன்னான்.

“இப்பொழுது கொஞ்சம் பிள்ளைகள் இவளிடம் கஷ்டப்படுகிறார்கள். அப்பொழுது அதிகமான பிள்ளைகள் கஷ்டப்பட்டிருப்பார்கள்” என்று கமலநாதன் சொன்னான்.

“உங்கள் வக்கீல் வேலையை விட, டாக்டர் வேலை எவ்வளவோமேல், உங்களிடம் எவனு

வது ஒரு கட்சிக்காரன் அகப்பட்டுவிட்டால் போதும். அப்புறம் அவன் அந்த இடத்தை விட்டு மீளவேமுடியாது. குற்றம் செய்தவன் என்று ஒருவரும், குற்றம் செய்யாதவன் என்று இன்னொருவரும் வாதாட, இடையில் சிக்கிக் கொண்டவன் குற்றம் செய்யாதவனாயிருந்தால்கூட, இவர்களது தொல்லை தாளமாட்டாமல், குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டு, தண்டனையை ஏற்றுக்கொண்டுவிடுவான்!" என்று தங்கம் சட்டமுறையைக் கேலிசெய்தாள்.

எதிரே இருக்கும் சட்ட நிபுணர்கள் சும்மாவா விடுவார்கள்.

"சட்டமுறை மெதுவானது, அவசரப்படுவதில்லை. நிச்சயமாக நீதி, அநீதி என்று தெரிகிறவரையில் விசாரித்து முடிவுசெய்கிறது. ஆனால் நீங்கள் நோயாளியைப் பார்த்தவுடனேயே, லத்தீன் பெயருள்ள நோய் ஒன்றைச் சொல்லி, அவனை அனுப்பிவிடுகிறீர்கள்" என்று கமலநாதன் சொன்னான்,

"வால்டேர் ஒருமுறை வேடிக்கையாகச் சொன்னார், 'டாக்டர்கள் தங்களுக்கு ஒன்றுந் தெரியாத மருந்துகளை, அதைவிட ஒன்றுமே தெரியாத உடலுக்குள் கொட்டிவிடுகிறார்கள்' என்று. அதைப்போல, ரிப்பேர் செய்யவருகிற ரேடியோபெட்டிகளைத் திருத்துவதுபோல. ஏதேதோ பிரித்து, அறுத்து, மூட்டி, மீண்டும் வெளியே தள்ளிவிடுகிறார்கள்" என்று குலசேகரன் தொடர்ந்து சொன்னான்.

"இப்பொழுது இருக்கிற வக்கீல்கள் அளவுக்கு டாக்டர்கள் இருந்தால், நாடு எவ்வளவோ நன்றாயிருக்கும். உடம்பு நன்றாகப் பாதுகாக்கப்பட்டால்தான், சட்டம், திட்டம் எல்லாம்" என்றாள் தங்கம்.

"சட்டம் என்பது வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி, ஒவ்வொருவருக்குமுள்ள சம்பந்தங்களை வரையறுத்து வைப்பதாகும். அது மறக்கப்பட்டால், அதன்மீது கட்டப்பட்ட சமுதாயம், மனித வாழ்க்கை, எல்லாம் சிதறிவிடுகின்றன. மனிதன் சட்டதிட்டமற்ற காட்டுமிராண்டிக்காலத்துக்குச் சென்றுவிடுகிறான். சமுதாயமே ஒருவகை நன்னம்பிக்கை ஒப்பந்தத்தின் மீது எழுந்ததாகும். அந்த ஒப்பந்தத்தின் விதிகள் மறுக்கப்பட்டால், சமுதாயம் என்று ஒன்று கிடையாது" என்று கமலநாதன் கோர்ட்டில் வழக்காடுவதுபோலவே பேசினான்.

வேடிக்கையோ, விளையாட்டோ அல்ல, சட்டம் என்பதற்கு அவ்வளவு மதிப்பும் பெருமையும் அவன் அளித்திருந்தான்.

"சட்டம் எப்படியிருந்தாலும், அதன்மூலம் நீதியைப் பெறுவதென்பது எல்லோராலும் முடியாமலே இருக்கிறது. ஒரு ரூபாய்க்கு வேண்டி மனுப் போட்டால், ஓராயிரம் ரூபாய் செலவு செய்தால் சட்டம் கருணைகாட்டும். மேலும் சட்ட நுணுக்கங்களைப்பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள்—நம் நாட்டில் பலருக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் ஏதாவது செய்துவிட்டால், சட்டப்பிரிவைக் காட்டிக், குற்றவாளியாக்கிவிடுகிறார்கள்" என்று தங்கம் தொடர்ந்தாள்.

இவைபோன்ற சாதாரணமான குற்றச்சாட்டுகளைக் கமலநாதன் ஏராளமாகக் கேட்டிருக்கிறான். அவைகளுக்குப் பதில் சொல்வதும் அவனுக்குக் கஷ்டமல்ல.

"சட்டத்தின் உதவி எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். அது அரசாங்கத்தின் கடமையாகும். சட்டத்தின்மீது அதை குற்றமாக்கக்கூடாது. சட்டம் தெரியாது என்ற காரணத்துக்காகக் குற்றம் செய்தவர்களை விட்டுவிடுவதென்றால், அப்புறம் அதற்கு ஒரு அளவே இருக்காது. தெரிந்தோ, தெரியாமலோ சட்டத்தை மீறுகிறவர்களெல்லாம் சட்டத்தைப் பற்றித் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று கூறித் தப்பித்துக்கொள்வார்கள்" என்று கமலநாதன் சொன்னான்.

தங்கத்திற்கு இதைப்பற்றியெல்லாம் கவலைப்பட்டது கிடையாது. அவளுக்கு மருத்துவக் கலையில் எவ்வளவு ஆர்வமும், பெருமையும் காணப்பட்டதோ, அந்த அளவு கமலநாதனுக்குச் சட்டப்படிப்பில் இருந்தது. எனவே சட்டத்தைப்பற்றிப் பேச்சு வந்ததும், கமலநாதன் அதைப்பற்றி வாதாடினான். தங்கமும், கமலநாதனும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது குலசேகரன் குறுக்கிடாமல் இருந்தான். அவன் பேசாமல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் தங்கம் அவன் பக்கம் திரும்பி, "சேகர்! நீ ஏன் ஒன்றும் பேசாமல் இருக்கிறாய்? வழக்கறிஞர்கள் இரண்டுபேர் இருந்தால், ஒருவர் பேசியதை எதிர்த்து இன்னொருவர் பேசவேண்டாமா?" என்றாள்.

[333 ம் பக்கம்]

(தொடரும்)

தையற் கலை

கே.பி.சுந்தரம், G.C.T.

இலகுவான (ப்ராக்) கவுன்

இந்த கவுன் 5 வயதுமுதல். 8 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அணிவதாகும். இதை வெட்டுவதற்கும், தைப்பதற்கும் விரைவில் அறிந்துகொள்ளலாம்.

அளவுகள்

இடுப்புவரை முதுகு நீளம்	10	அங்
முழு நீளம்	25	,,
கை நீளம்	$4\frac{1}{2}$	,,
மார்புச் சுற்று அளவு	24	,,
இடுப்பு சுற்று அளவு	22	,,
பாதித் தோள்	$4\frac{3}{4}$	,,
முன்னங்கை சுற்று அளவு	$3\frac{1}{2}$	,,

மேல்பக்கம் பாடியின் விளக்கம்

1-ல் இருந்து 0 வரை $10\frac{1}{2}$ அங்.
(இடுப்புவரை முதுகுநீளம் $+\frac{1}{2}$ அங்.)









2-ல் இருந்து 0 வரை $5\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $\frac{1}{2}$ அங். குறைவு)
3-ல் இருந்து 0 வரை 2 அங்.
($^1/_{12}$ மார்பளவு)
4-ல் இருந்து 0 வரை 5 அங்.
(பாதித்தோள் $+\frac{1}{4}$ அங்)
5-ல் இருந்து 4 வரை $\frac{1}{2}$,,
6-ல் இருந்து 4 வரை நேர்க்கோடு இணைக்கவும்.
7-ல் இருந்து 2 வரை $7\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவு $+1\frac{1}{2}$ அங்.)
8-ல் இருந்து 1 வரை $7\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $+1\frac{1}{2}$ அங்.)
9-ல் இருந்து 8 வரை $\frac{3}{4}$,,
10-ல் இருந்து 0 வரை 3 அங்.
11-ல் இருந்து 0 வரை 1 ,,
12-ல் இருந்து 1 வரை $\frac{1}{2}$ அங்.

1, 2, 11, 3, 5, 7, 9, 1 எண்கள் பின் பக்கம் இணைப்பவைகள்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கையின் விளக்கம்

1-ல் இருந்து 0 வரை 5 அங்.
(முழு நீளம் $+1\frac{1}{2}$ அங்.)
2-ல் இருந்து 1 வரை $1\frac{1}{2}$ அங்.
3-ல் இருந்து 2 வரை $4\frac{1}{2}$ அங்.
(முன்னங்கை லூஸ் $+1\frac{1}{2}$ அங்.)
4-ல் இருந்து 1 வரை 4 அங்.
(முன்னங்கை லூஸ் $+1$ அங்.)
5 ல் இருந்து 1 வரை $\frac{1}{2}$ அங்.
(5, 2, 0 வரை இணைக்கவும்)
6-ல் இருந்து 0 வரை $2\frac{1}{2}$ அங்.
7-ல் இருந்து 6 வரை $\frac{1}{2}$ அங்.
(3, 7, 0 வரை படத்தில் உள்ளபடி வரையவும்.)

1, 5-க்கும் மத்தியில் $\frac{1}{2}$ அங். டார்ட்டு பிடிக்கவும்.

(லே அவுட்) வெட்டியபிறகு, கவுன் துண்டுகள்.

1, 2 எண்கள் (ஸ்கார்ட்) கீழ்ப்பக்கம் பாவாடை. 3 எண் முன்பக்கம் மேல் பாடி. 3 எண் பின்பக்கம் மேல்பாடி. 4 எண்ணுள்ள பின்பக்கத்தில் திறப்பு (ஓப்பன்) அமைக்கவும். 2 எண்ணுள்ள (ஸ்கார்ட்) பாவாடை பின்பக்கம் 3 அங். திறப்பு அமைக்கவம்.

(சென்ற இதழ் விளக்கப்படத்தைப் பார்க்கவும்).

(தொடரும்)

Regd. No. M 6296 MAN

வெற்றி முழக்கம் செய்கிறது!

பொன்னான ஏடு! புதிய மலர்க்காடு!

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி

கே. சாவித்திரி :: சந்திரபாபு

தங்கவேலு :: ராமச்சந்திரன்

முத்துலட்சுமி :: பி. எஸ். வீரப்பா

மற்றும் பலர் நடித்த,

மாடர்ன் தியேட்டர்ஸ்,

சுகம் எங்கே?

சென்னை - கெயிட்டி & பிராட்வே

மற்றும் தமிழ்நாடெங்கும்!

மாடர்ன் தியேட்டர்ஸில் தயாரிக்கப்பட்ட

66-வது படம்!

டைரக்ஷன்:

கே. ராம்நாத்

இன்றே பாருங்கள்! களி கூறுங்கள்!

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St. Mannadi, MADRAS-1.